www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம KANNOTTAM

வெளியீடு - 14 10 மே 2001 விலை:- 10.00

கடந்த காலத்தின் கண்ணாடி மட்டுமல்ல!! வரலாறு எதிர்காலத்தின் வழிகாட்டியுமாகும்!!!

# இலங்கையின் எட்டு மூலைகளிலும் இனவாதிகளின் வெறியாட்டம்

நாட்டில் அமைதியும், சுமூகமான இயக்கமும் எங்குள்ளது என்பது தொடர் கேள்வியாக உள்ளது.



விஷம் போல் ஏறியுள்ள விலைவாசிகள், போக்குவரத்து செலவுகள் தொடர்ந்து அதிகரிக்கின்றமை, தொழிலாளர்களின் கஷ்டம், இனங்களிற்கிடையிலான உறவில் இன்னமும் அமைதியேற்படாமை, பாதாள உலகக் கோஷ்டிகளின் தலையெடுப்பு, அரசின் சில பக்கங்களிலிருந்தும், பிரதான எதிர்கட்சி மட்டத்திலிருந்தும் எழும்பும் தேசப்பொறுப்பற்ற முரண்பாடான பேச்சுக்கள், சிறைச்சாலைகளிலேயே பாதுகாப்பின்மை, ஒன்றன் பின் ஒன்றாக கலவர நிலைமைகள், கட்டுப்பாடற்ற பொலிஸ், கழன்றுகொண்டு ஓடும் இராணுவம், கட்டாக்காலியாகச் செயற்படும் அரச நிர்வாகம் என நம்பிக்கையற்ற நிலைமைகளை வளர்க்கும் போக்குகள் அண்மைக்காலத்தில் அதிகரித்துவருகின்றன.


இனப்பிரச்சினை தீர்வுக்கான முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட புதிய அரசியல் யாப்பு யோசனைகள் இப்போது காலவரையறையின்றி கிடப்பில் போடப்பட்டுள்ளன. அரசாங்கத்திடம் போதிய பெரும்பான்மை இல்லை. எதிர்க்கட்சியும் பெரும்பான்மையான தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த அரசியல் யாப்பு அரங்கேறக் கூடாது என்பதில் அக்கறையாக உள்ளன.

யுத்த சன்னதங்களே களத்திலும் மேடைகளிலும் உரத்து முழங்குகின்றன. சமாதானம் என்பது நோர்வேயைத் தவிர வேறெதனையும் நம்பியிருப்பதாகத் தெரியவில்லை.

விலைவாசி உயர்வுக்கும் மக்களின் வாங்கும் சக்திக்கும் இடையிலான விரிந்து வரும் இடைவெளியால் பல சம்பள உயர்வுக் கோரிக்கைகளுக்காக கண்ணை மூடிக்கொண்டு போராடவேண்டிய நிலைக்குத் தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பள உயர்வு, போனஸ், முற்பணம் எனப் போராடும் றெயில்வேத் தொழிலாளர்கள் சிலர் அராஜகத்தில் ஈடுபடும் நிலை தோன்றியுள்ளது:

மலையகத்தில் ஏற்பட்ட சம்பள உயர்வு கோரிக்கைக்காக அரசியல், தொழிற்சங்க வேறுபாடின்றி அனைத்து சக்திகளும் ஓரணி திரண்டு மிகவும் கட்டுப்பாடான முறையில் போராடி தமது கோரிக்கையில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியீட்டியமை இன்றைய இலங்கையின் நிலைமையில் பெரும் பாராட்டுக்குரிய ஒன்றாகும்.



வேலியே பயிரை மேய்ந்தது போல பிந்தனுவேவாவில் நடைபெற்ற கொலைகளும், அதன் தொடராக மலையகத்தில் ஏற்பட்ட பதற்றத்தின் போதும் பொலிஸ் ஆயுதப்படைகள் நடந்து கொண்ட விதங்கள் மிகவும் வேதனைக்குரியவையாகும். மாவனல்ல நிகழ்ச்சிக்கு எந்த வகையிலும் குறைவில்லாத இனவிரோதம் அங்கும் நிகழ்ந்தது. ஆனால் மலையகத் தலைமைகள் பொறுப்பாக நடந்து கொண்டதால் அதைத் தீவிரவாதிகள் பயன்படுத்தும் நிலை உருவாகவில்லை.

ஆனால் இன்னமும் அது நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது. அரசு கடிவாளத்தில் சிறிது கவனமில்லையாயினும் மலையகத்தைக் கொழுத்த பேரினவாதிகள் தயாராகவே உள்ளனர் என்பதில் அரசு எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

தொடர்ச்சி 02பக்கம்

## மேதின வேண்டுகோள்

### தோழர் அ. வரதராஜப்பெருமாள்



எமது மக்களை மிகப் பெரிய அவலஞ் சூழ்ந்துள்ள நெருக்கடியான காலகட்டத்திலேயே இம்முறை நாம் மேதினத்தை நினைவு கூருகிறோம்.

இலங்கை மக்களின் முன்னால் இன்று பூதாகரமெடுத்து நிற்கும் இனப்பிரச்சினைக்கு மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையான தீர்வா அல்லது முடிவில்லாது தொடரும் யுத்தமும் அழிவுமா என்பதே எம்முன்னுள்ள மிகப் முக்கிய கேள்வியாகும்.

இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வு என்பது இன்று இரண்டாம் பட்சமான விடயமாகியிருப்பது சமாதானத்தீர்வில் நம்பிக்கையுள்ள பலருக்கும் விசனத்தை ஏற்படுத்துவதாகும்.

தமிழ் மக்களுக்கும் இந்த நாட்டின் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கும் எத்தகைய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிப்பதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இன்றைய அவசர அவசிய தேவையாகும்.

இந்த அதிகாரப் பகிர்வு எப்படியிருக்க வேண்டும் என்பதில் தென்னிலங்கைக் கட்சிகள் மத்தியிலோ அல்லது தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியிலோ தெளிவான சுயாதீனமான நிலைப்பாடுகள் இல்லாதது கவலைக்குரியதாகும்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் மேதின நிகழ்ச்சிகள் சுதந்திரமாக நடை பெற்று இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகிவிட்டது. இங்கு நிலவும் ஜனநாயக விரோதங்களும். வன்முறைகளும், இராணுவமயமும் இல்லாத நிலையொன்று உருவாக்கப்பட வேண்டும். வெவ் வேறு கருத்துடையோர் சுதந்திரமாக கூட்டங்கள் நடத்துவதற்கும் ஊர்வலங்கள் நடத்துவதற்கும் உண்மையை உணரவைப்பதற்குமான சூழ்நிலை மீண்டும் உருவாக வேண்டும்.

மேதினம் தொழிலாளர்கள் எட்டு மணிநேர உரிமையைப் பெற்ற ஒரு தினம் மட்டுமல்ல. அது தொழிலாளர்களின் பல்வேறுபட்ட உரிமைகள், இனங்களின் உரிமை, பெண்களின் உரிமை, சிறுவர்களின் உரிமை சூழலியல் பாதுகாப்பு போன்ற அனைத்து போராட்டங்களினதும் சின்னமாகும்.

எனவே. இந்த மேதினம் இன்று மக்களின் அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட தினம் என்ற வகையில் இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்ட நாம் பாடுபடுவோம். சரியான அதிகாரப் பரவலாக்கல் இல்லாமல் உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியாது என்பதனால் அதிகாரப் பரவலாக்கல் அடிப்படை மனித உரிமைகளுக்கு உயர்ந்த மதிப்பளிக்கும் உண்மையான ஜனநாயகம் ஆகியவற்றுக்கான இயக்கங்களை முன்னெடுப்போம் என இத்தினத்தில் உறுதி கொள்வோம்.

## தமிழ் நாடு

தமிழக சட்ட சபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய அ.தி.மு.க [redacted]





சார்ஜா நாயகன் சனத் ஜெயசூரியா

படிப்பகம்

www.padippakam.com



கண்ணோட்டம்



# இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுவது எப்போது நிற்கும்

மாவனெல்லை நகரில் விஷமிகள் சிலரால் ஏற்படுத்தப்பட்ட அசம்பாவிதம் இனவாதம் கொழுந்து விட்டெரிவதற்கான நிலை மைகளை தோற்றுவித்துள்ளது.

முஸ்லீம் மக்களுக்குச் சொந்தமான கடைகள், வீடுகள், வாகனங்கள், தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சில உயிரிழப்புக்களும் பலர் காயமடைவதற்கான நிலைமைகளும் ஏற்பட்டுள்ளன. இனவாத நெருப்பில் குளிர்காய முனைபவர்கள் இதுவொரு ஆபத்தான விளையாட்டு என்பதை உணர்வதில்லை.

இன்று தீராத இன முரண்பாட்டுச் சிக்கலில் சிக்கித் தவிப்பதற்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களை பலிகொள்வதற்கும் இந்த விதமான சம்பவங்களே காரணமாய் அமைந்தன.

1958, 1977, 1981, 1983 என நடைபெற்ற திட்டமிட்ட இன வன்முறைகள்தான் இன்று நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடப்பதற்கும், கொடூர யுத்தத்திற்கும் வழிவகுத்தது.

எண்ணிக்கையில் சிறுபான்மையினரான மக்கள் மீது மேற்கொள்ளப்படும் மேலாதிக்க வகைப்பட்ட இனவாத அச்சுறுத்தல் நாட்டை கற்பனை செய்ய முடியாத பேரழிவை நோக்கி இட்டுச் செல்லும் என்பதே அனுபவமாகும்.

சேர்ந்து வாழ்தல், ஒரு சமூகத்தின் உரிமையை மற்றவர்கள் மதித்து நடத்தல் என்பதே நவீன உலகில் வலியுறுத்தப்பட்டுவரும் முக்கிய கருத்தாகும்.

பல்லினங்களைக் கொண்ட ஒரு நாட்டில் வாழும் ஒரு இனத்தின் இருப்பை மதியாத மற்ற இனம் நிம்மதியாக வாழ முடியாது. "வாழு,வாழவிடு" என்பதே இங்கு உயரிய கோட்பாடாக இருக்க முடியும்.

நடைபெற்று வரும் யுத்தம் முஸ்லீம் மக்களை "மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி" என்ற நிலைக்குத் தள்ளியுள்ளது. "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த" கதையாக மாற்றியுள்ளது.

1915இல் முஸ்லீம் மக்களுக்கு எதிரான பேரினவாத வன்முறை மேற்கொள்ளப்பட்டதும் பின்னர் 1976இல் புத்தளம் பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்கள் கொல்லப்பட்டதும் 1981 இல் காலியில் முஸ்லீம் மக்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதும் இங்கு கருத்தில் எடுக்கப்பட வேண்டியது. தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் இனவாத நோக்கிலான ஒடுக்குமுறைகளால் காலத்துக்குக் காலம் முஸ்லீம்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லீம்களையும் இணைத்தே தேசிய ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டம் என்ற கருத்து யாழ்ப்பாணத்து முஸ்லீம்களை ஒரு சில மணி நேரத்தில் உடுத்த துணியுடன் புலிகள் வெளியேற்றியதன் மூலமும், காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, ஏறாவூர் படுகொலை போன்றவற்றால் அர்த்தமிழக்கச் செய்யப்பட்டது. தமிழ் முஸ்லீம் மக்களிடையே ஆழமான பிளவு ஏற்படுத்தப்பட்டது. தமிழர்கள் மீது மாறாத கறையை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது இலங்கையின் சகல இனங்களும் ஒரு இனத்தின் மீது மற்றொரு இனம் குரோதமும், வெறுப்பும், வன்மமும் கொள்ளும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒருவரையொருவர் பழிதீர்க்க கத்தியை தீட்டும் நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலை இலங்கையில் மானிட விழுமியங்கள் பற்றிய கேள்வியை எழுப்புகிறது. நாமும் நவீன நல்லியல்பு கொண்ட உலக சமூகத்துடன் அடையாளப்படுத்தக் கூடிய பிரிவினரா என்ற சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

எம்மிடம் உள்ள அற்பத்தனங்களைக் களைந்துவிட்டு மனித குலம் அன்பினால் வழிநடத்தப்பட வேண்டும் என்ற புத்தபிரானின் போதனையை பின்பற்ற முயல்வோம்.

இனங்களின் தனித்துவங்கள் அங்கீகரிக்கப்படாத வரை, சமத்துவமாக வாழ்வதற்கான உரிமை அங்கீகரிக்கப்படாத வரை இந்த நாட்டில் பெருக்கெடுத்தோடும் இரத்த ஆற்றை தடுத்து நிறுத்திவிட முடியாது.

பாழடைந்த வீடுகளில் வேதாளம் சேருவது போல, வெள்ளெருக்கு பூப்பது போல, சேடன் குடிபுகுவது போல, மூதேவி சென்றிருந்து வாழ்வது போலத்தான் இப்போது எமது இலங்கையரின் வாழ்வும் ஆகிவிட்டது.

அரசியல் தலைமைத்துவ புத்திஜீவிகளின் பொறுப்பற்ற தன்மை இந்த நிலைமையை தோற்றுவித்துள்ளது. விளைவு சிறுபான்மை இனங்களின் இருப்பை நிராகரிக்கும் பேரினவாத சக்திகளை புதிது புதிதாக உருவாக்கியுள்ளது. இதன் மறுதலையாக பாரதூரமான சிற்றினவாதம் தலைதூக்கும்.

தற்போது எமது தலைக்கு மேல் வெள்ளம் போகிறது. இப்போதாவது தமிழ், சிங்கள, முஸ்லீம் தலைமைத்துவங்கள் ஆக்கப்பூர்வமாக சிந்திக்க வேண்டும்.

# இலங்கையின் எட்டு மூலைகளிலும் இனவாதி........

01ம் பக்க தொடர்ச்சி

தனிப்பட்ட கப்பகாரன் ஒருவனின் (அரசியல் வாதிகளின் பின்புலம் உண்டு) செயற்பாடு மாவனெல்லையில் உள்ள முஸ்லீம் மக்கள் சொத்துக்களின் அழிவுக்கும், பல்வேறு பகுதிகளில் இனவன்முறைகளும் அவை பெரும்பாலும் முஸ்லீம் மக்களை பாதிப்பதாகவும் அமைந்து விட்டன.

அங்குள்ள பொலிஸ் பொறுப்பற்ற விதமாக நடந்து கொண்டதென அரசின் மனித உரிமைகள் ஆணைக்குழுவே தனது களஆய்வின் பின் அறிக்கை வெளியிட்டுள்ளது. இவ் வாணைக்குழு பிந்தனுவேவா விடயத்திலும் பொலிஸின் மீது குற்றம் சாட்டியது.

இந்தப் பொலிஸ் எதிர்க்கட்சி கோருவதுபோல சுதந்திரமாகச் செயற்படும் நிலை ஏற்படுமானால் நாட்டின் நிலை பொலிஸ் சர்வாதிகாரத்துக்கு அடிமையாக நேரிடும்.

பேரினவாத சக்திகள் தொடர்பில் அரசும் எதிர்க்கட்சியும் கடைபிடித்து வரும் தாராளவாதமே அடுத்தடுத்து சிறுபான்மை இனவிரோத செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்துள்ளன. சிறுபான்மை மக்கள் மத்தியிலுள்ள குறுகிய நோக்கங்கள் கொண்ட அரசியற் சக்திகள் இச்சந்தர்ப்பங்களைத் தங்கள் சுயநலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையே மேலும் பெருகுகிறது.

இதனால் நாட்டின் பொது நன்மைக்காக, பேராபத்துக்களுக்கு மத்தியிலும் தம்மைத் தியாகம் செய்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் சக்திகளின் வேலை ஓட்டை வாளியில் நீரிறைப்பதாகவே முடிவடைகின்றது.

இனவாத சக்திகள் ஒருபுறமிருக்க, இன்னொரு புறத்தில் பாதாள உலகக் கோஷ்டிகளின் இரத்தம் தோய்ந்த கரங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளுக்காகவும், தமது வர்த்தகப் போட்டிகளுக்காகவும் ஆட்கடத்தல்கள், பட்டப் பகலில் நட்டநடு வீதிகளில் படுகொலைகள் செய்தல், பாலியல் பலாத்காரங்களை மேற்கொள்ளுதல் என அவற்றின் சமூக விரோத, மக்கள் விரோத செயல்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளன. அவர்கள் ஒத்துழைப்பை அரசியல்வாதிகள் நாடுகின்ற நிலைமையும் அதிகரிக்கின்றன.

பாரதூரமான சமூக குற்றங்களை இழைத்தவர்கள் மீதான தயவுதாட்சனியமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதில் அநாவசியமான காலதாமதங்கள் காணப்படுகின்றன. அதேவேளை அப்பாவிகளான பல இளைஞர்கள் லஞ்ச ஊழல்கள் காரணமாகவும், சட்டத்தைக் காப்பாற்ற வேண்டியவர்கள் அக்கறையின்மை காரணமாகவும் அநாவசியமாக சிறைகளில் வாட்டப்படுகின்றனர்.

இவை மக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களையே வளர்ப்பதோடு, இளைஞர்கள் மத்தியில் ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, அரச நிறுவனங்கள் ஆகியவற்றின் மீதான வெறுப்புகளையும் எதிர்ப்புக்களையுமே வளர்க்கின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அரசியல் அரங்கில் அரசின் தலைவர்கள் ஆளுக்கொரு விதமாகப் பேசுவதும், ஐ.தே.க குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதும் என்ற நிலைமையானது.

பிரதான கட்சிகளில் ஏதாவதொன்றாயினும் நம்பிக்கையூட்டுவதாகச் செயற்பட வேண்டும். இல்லையென்றால் பரந்துபட்ட மக்கள் வேறுவழியின்றி புரட்சி, விடுதலை என்ற முக மூடிகளுடன் தீவிர சுலோகங்களை விட்டெறிந்து செயற்படும் ஜனநாயக விரோத மற்றும் சட்ட விரோதக் குழுக்களை-கட்சிகளை நம்புகின்ற நிலைமையே யதார்த்தமாகும்.

நாட்டின் இன்றைய நிலைமைகளுக்கு அத்திவாரமிட்ட ஐ.தே.க இன்று எதிலும் சம்பந்தமில்லாத சாதுவாக பாசாங்கு பண்ண முனைகிறது. அடுத்தடுத்து இன வன்முறைகளைத் தூண்டிவிட்டு தமிழர்கள் மீதும் முஸ்லீம்கள் மீதும் இரத்தம் தோய்ந்த படுகொலைத் தாக்குதல்களை நடத்தி இன்றைய நிலைமைகளை உருவாக்கியதற்கு அந்த கட்சி முற்றுமுழுதாக பொறுப்பேற்க வேண்டும்.

அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அடுத்தமுறை தான் எப்படியாகிலும் தான் ஜனாதிபதியாகிவிட வேண்டும் என்பதைத் தவிர வேறெந்த அக்கறையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. உட்கட்சி குத்துவெட்டுக்களால் ஜன்னி கண்டிருக்கும் இவ்வேளையிலும் அரசை எப்படிக் கவிழ்ப்பது என்ற கனவில் மட்டுமே ஐ.தே.க.வினர் உள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வை உருவாக்குவதிலும், தற்போதைய அராஜக நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதிலும் ஒரு பொறுப்புள்ள எதிர் கட்சியாக ஐ.தே.க செயற்படவில்லை. தங்களால் விதைக்கப்பட்ட பிரச்சினைகள் அவை விருட்சமாகியுள்ளதைக் கண்டு பெருமை கொள்கிறார்கள் என்பதுபோல தான் உள்ளது.

இன்றைய அரசு ஐ.தே.கவினால் உருவாக்கப்பட்ட இந்தப் பிரச்சினைகளை தனது ஆரம்பத்திலியேயே தீர்த்திருக்கவேண்டும். இனியும் சாக்குப் போக்குச் சொல்லிக் காலம்தாழ்த்துவது ஆபத்தானதொன்றாகும்.

முன்னாள் ஐ.தே.க ஜனாதிபதி விஜயதுங்காவைப் போன்று வாய்க்கு வந்தபடி பேசும் சிலர் இந்த அரசிலும் இருக்கிறார்கள். முதலாவது அவர்களை அடக்கி வாசிக்கச் செய்யவேண்டும்.

இரண்டாவதாக சிஹல உறுமய, சிங்கள வீரவிதான, பூமி புத்திரர்கள், இராணுவத்தை விட்டோடியோர் போன்ற சக்திகளின் பேரினவாத செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

தேசிய அரசியல்கட்சிகளின் உள்ளூர் அரசியல்வாதிகளுடன் சேர்ந்து கொண்டு இவர்கள் அடாவடித்தனங்களில் ஈடுபடுகின்றார்கள். பொலிஸ் மற்றும் இராணுவத் துறையின் சில பிரிவினரும் இவர்களுக்குத் தாளம் போடுகின்றார்கள்.

பாதாள உலகக் கோஷ்டிகளுடன் இவர்கள் தொடர்புகளை வளர்த்துக் கொள்கிறார்கள். இவர்களால் நாட்டுக்கு அழிவு மட்டுமே மிஞ்சும்.

இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார தளத்தில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு, முதலாவதாக புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். ஒரு சமூகக் கட்டுக்கோப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

ஜனநாயக நிறுவனங்களையும், ஜனநாயக சக்திகளையும் வலுப்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விடயங்களில் அரசும், ஜனநாயக ஆர்வலர்களும், பொறுப்புள்ள அரசியல் கட்சிகளையும் தத்தமது பங்கை உணர்ந்து செயற்படவில்லையென்றால், **"பேய்கள் அரசாளும் பிணந்தின்பவை சாத்திரங்களாகும்"**

## வாழ்வின் இலட்சியம்

போரின் பரிசளிப்பினால் சிதைந்த தேசத்தின்
பரதேசிக் கூட்டம் நாங்கள்
நாளொரு பேச்சும் பொழுதொரு செயலுமாய்
காலங்கள் கரைகின்றன.
தப்புதலும் பிழைத்தலுமே வாழ்க்கையானது
உணர்வற்ற உடலை வளர்ப்பதற்கு
சோற்றை தேடியலைவதே
வாழ்வின் இலட்சியமானது.

யாழினி

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
7 1603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 27118

141A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 23102

சென்செபஸ்தியார் வீதி
மன்னார்.
☎ 023 32822

மின் அஞ்சல் முகவரி [E-MAIL ADDRESSES]
epiclondon@gn.apc.org - LONDON

படிப்பகம்

www.padippakam.com



அன்பார்ந்த நண்பர்களே!

# அன்பார்ந்த நண்பர்களுக்கு

அ. வரதராஜப்பெருமாள்

எழுதும் கடிதம் ~ 09

வணக்கம்! என் உளமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கடிதம் உங்கள் கைகளில் தவழும் மே மாதத்தின் முதலாம் நாளான உலகத் தொழிலாளர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1970 களின் நடுப்பகுதிவரை மேதினமானது ஒவ்வொரு நாடுகளிலும் தொழிலாளர்களின் எழுச்சி தினமாக அரசியல் பொருளாதார உரிமைகள் தொடர்பாக தொழிலாளர்களின் கூட்டு வலிமையை வெளிப்படுத்தும் தினமாக இருந்தது. பின்னர் சர்வதேச ரீதியில் மேதினத்தின் சாராம்சம் குறைந்த வகையில் அது ஒரு சம்பிரதாய கொண்டாட்ட விழாவாக அமையத் தொடங்கியது.

எவ்வாறாயினும் 1990களின் ஆரம்பம் வரை உலகரீதியில் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களுக்கும், தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கும் எதிர்கால நம்பிக்கையை ஊட்டும் எழுச்சி தினமாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் 1990களின் ஆரம்ப ஆண்டுகளில்.

❖ சோவியத் குடியரசுகளின் ஒன்றியம் கலைந்து போனமையும்,

❖ சோவியத் ஒன்றியத்தின் குடியரசுகள், அவற்றோடு கூட்டுச் சேர்ந்து நின்ற சோஷலிச பொருளாதார அமைப்பைக் கொண்டிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் தேர்தல் ஜனநாயகம், முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் என அடிப்படை மாற்றங்கள் மக்கள் எழுச்சிகளின் ஆதரவுகளுடன் ஏற்பட்டமையும்,

❖ அந்நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளினால் உணவுக்கும், மூலதனத்துக்கும் அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளை நோக்கிக் கையேந்தியமையும்,

❖ ஆப்கானிஸ்த்தான், எதியோப்பியா ஆகியவற்றில் தமக்கு ஆதரவாக இருந்த ஆட்சியாளர்களை சோவியத் யூனியன் கைவிட்டதுடன், கியூபாவை இக்கட்டான சூழலிலிருந்து காப்பாற்ற சோவியத் யூனியன் வல்லமையற்றுப் போனமையும்,

❖ சீனா, வியட்நாம் போன்ற கடும் கம்யூனிஸ நாடுகளே அமெரிக்கா மற்றும் மேலைத்தேய நாடுகளுடன் கை குலுக்கி அவற்றின் மூலதனத்தை வரவேற்றதோடு தமது பொருளாதார அமைப்பில் சந்தைப் பொருளாதார சீர்திருத்தங்களைப் புகுத்தியமையும்.

போன்ற தொடர் காரணங்கள் சமூக - அரசியற் புரட்சி, சோஷலிசம், கம்யூனிசம் என்பன தொடர்பான சந்தேகங்களையும் நம்பிக்கையீனங்களையும் திடீரென வளர்த்து விட்டன.

➢ உலகம் பூராவும் ஏற்றுமதி இறக்குமதி தாராளமயமாக்கம்,

➢ போட்டிச் சந்தைப் பொருளாதார விரிவாக்கம்,

➢ நிதிச் சந்தை, கம்பனிச் சட்டங்கள், தொழிலாளர் உரிமைகள் மற்றும் விடயங்கள் தொடர்பான பொருளாதாரச் சீர்திருத்தங்கள்,

➢ பொருளாதாரத்தில் அரச கட்டுப்பாடுகள் மற்றும் ஈடுபாடுகளைத் தளர்த்துதல்,

➢ வெளிநாட்டு மூலதனங்களை வரவேற்றல், உலக பலம் வாய்ந்த பல்தேசிய கம்பனிகளின் மூலதனங்களுக்கு உற்பத்திகளையும் சந்தைகளையும் திறந்து விடல்,

➢ நாடுகளின் அதிபர்களும் பிரதமர்களும் கூச்ச நாச்சமின்றி அபிவிருத்தியடைந்த நாடுகளிடம் கடன் கேட்டு கையேந்தும் நிலைமையைப் பெருமையாகக் கருதுகின்ற மையானது சர்வதேசமயப்பட்டுள்ளமை,

➢ சோஷலிச நாடுகள், வறிய நாடுகள் எல்லாவற்றிலும் நவீன தொழில் நுட்ப மற்றும் சொகுசு நுகர்வுப் பொருட்கள் குவிந்து அனைத்து மக்கள் பிரிவினரையும் கவரத் தொடங்கியமை,

➢ தொடர்பு மற்றும் தகவல் சாதனங்களின் விரிவாக்கமானது பரந்துபட்ட மக்களின் நடை, உடை, பாவனை, விருப்பங்கள், ரசனைகள், பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வியல் விடயங்களிலும் கருத்துக்களிலும் செல்வாக்கை ஆழமாக்கி வருகின்றமை,

போன்ற அம்சங்கள் தொழிலாளர்களின் எழுச்சி, ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசியப்புரட்சி, சோஷலிசப் புரட்சி என்ற கருத்துக்கள் மீதும் செயல்கள் மீதும் நம்பிக்கைகளை சிதறடித்துள்ளன. இப்போதெல்லாம் தொழிலாளர்களின் போராட்டங்கள் தமது கூலி உயர்வு, தமது தொழில் அமைப்புகளுக்குள் சலுகைகள் என்பதற்குப்பால் செயற்படுவதில்லை. தொழிலாளர்கள் பெரும்பாலும் ஆட்சியிலிருக்கின்ற அல்லது ஆட்சியைப் பிடிக்கக் கூடிய அல்லது ஆட்சியில் வலுவாகப் பங்குபற்றுகின்ற கட்சிகளின் தொழிற் சங்கங்களில் அங்கம் வகிப்பதே தமது நலனுக்கு உகந்ததெனக் கருதுகின்றனர்.

சமூகத் தத்துவங்கள், சமூக இலட்சியங்கள் மீதான ஈடுபாடுகளும், அக்கறைகளும் அவற்றின் வழி நடக்க முயல்தலும் என்பவை மிக அருகியுள்ளன.

**தனி மனிதர்கள் மத்தியில் சமூக இலட்சியங்கள் கரைந்து போகுமானால், சமூக முன்னேற்றம் பற்றிய உணர்வுகள் மூன்றாம் பட்சமானால் அது அடுத்தவரை ஏமாற்றத் துணியாமை, வாக்கைக் காத்தல், பொய் சொல்லக் கூசுதல், அடுத்தவர் உடைமையைக் கவராதிருத்தல், செய்நன்றி மறக்காமை, முகஸ்த்துதி பாடிப் பிழைக்காமை, போன்ற தனிமனித ஒழுக்கங்கள் பற்றிய அடிப்படைகளிலும் சிதறல்களை விளைவிக்கும்.**

கடந்த காலங்கள் சமூகம், சமூகப்புரட்சி, சமூக உயர்ச்சி என தமது காலங்களையும் உழைப்புக்களையும் தியாகம் செய்தோர் பெரும்பாலானோர் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதில் ஒரு பகுதியினர் விட்டதைத் திருப்பி பிடிப்பதற்காக ஓடுகின்றனர். இன்னொரு பகுதியினர் தங்கள் பிள்ளைகள் தங்களைப் போல அநியாயமாகிப் போய்விடக் கூடாது எனக் கருதுகின்றனர்.

மேலும் எம்மை எல்லாக் கோணத்திலிருந்தும் கவ்வி நிற்கும் யுத்தமும், பயங்கரவாதங்களும், அவற்றினால் ஏற்பட்டுள்ள பாரதூரமான சமூக-பொருளாதார விளைவுகள் மேற்குறிப்பிட்ட விரக்தியையும், சமூக ஈடுபாடுகளிலிருந்து ஒதுங்கிப் போவதற்கும், தமது குறுகிய சுயநலத் தேவைகளுக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பதையும் தீவிரப்படுத்தியுள்ளன.

இப்போதெல்லாம் உண்மை, நேர்மை, மனிதாபிமானம், வாக்கைக் காப்பாற்றுதல் என்பவையெல்லாம் செல்லாதவைகள் ஆகிக் கொண்டிருக்கின்றன. பிழைப்பதற்கு வழியைப் பார் என்பதே இப்போது பிரதான தத்துவமாகி நிற்கின்றது. நம்பிக்கைக்குரியவர்களைக் காண்பதென்பது பட்டப் பகலில் நட்சத்திரம் தேடுவது போல் ஆகிவிட்டது.

மேதினத்தினுடைய சர்வதேசிய மற்றும் தேசிய முக்கியத்துவம் இன்றைய நிலையில் மறைந்துள்ளதெனினும், வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒடுக்கு முறைகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்ற மக்கள் கிளர்ந்தெழுந்து புரட்சி செய்வதன் மூலம்தான் மனித நாகரீகம் ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு வளர்ச்சியடைந்தது.

**புரட்சிகளை நடத்தும் போர்வீரர்கள் குறிப்பிட்ட வர்க்கங்களின் வகையாக அணிதிரளும் பரந்துபட்ட பொது மக்களே. அவர்கள் ஆயுதங்கள் தாங்கியிருக்க வேண்டும் அல்லது அகிம்சையாகத்தான் இருக்க வேண்டும் என்ற எந்த நியதியும் இல்லை. ஆனால் பரந்துபட்ட பொதுமக்கள் விழிப்புணர்வு பெற்று எழுச்சி கொண்டு போராளிகளாகச் செயற்பட வேண்டும் என்பது நியதி என்பதை எமது நேரடி அனுபவமும் உணர்த்துகிறது.**

சுரண்டப்படும், ஒடுக்கப்படும், அடக்கப்படும் மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுவதற்கும் எழுச்சியைத் தூண்டுவதற்கும் காலத்துக்குகாலம் அமெரிக்க சுதந்திரப் போராட்டம், பிரெஞ்சுப் புரட்சி, சோவியத் சோசலிஷப் புரட்சி என்பன வகித்த பாத்திரத்தைப் போல மேதினமும் பங்களித்திருக்கின்றது.

இலங்கையிலும் குறிப்பாக எமது சமூகத்திலும் இலங்கையின் இனப்பிரச்சினையானது உள்நாட்டு யுத்தம் என்ற வடிவத்துக்கும் பயங்கரவாதங்கள் நிறைந்ததாகவும் மாறிய பின்னர் மேதினத்தின் முக்கியத்துவம் மங்கிவிட்டது.

இருப்பினும் சமூக வரலாற்றின் மீதும் பிரச்சினைகளின் மீதும் ஆத்மார்த்தமாக ஈடுபாடு கொண்டுள்ள நாங்கள் மேதின வரலாற்றுப் பாத்திரம் முடிந்து விட்டதாகக் கருத முடியாது மேதின நினைவு எமக்கு விசாலமான அரசியற் பார்வையைத் தரவேண்டும். மக்கள் மத்தியில் சோர்ந்து கிடக்கும் சமூக ஈடுபாட்டை மீள ஊக்குவிக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகட்டும்.

## அன்பு நண்பர்களே!

கடந்த சில மாதங்களாக இந்த நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருந்த தொடர் அரசியல் நிகழ்ச்சிகள் உள்நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி இலங்கையில் சமாதானத்துக்கான கதவுகள் திறக்கின்றன என்ற அபிப்பிராயத்தையும் நம்பிக்கையயும் உருவாக்கியிருந்தன. இந்த ஆண்டு ஜனவரிக்கான கண்ணோட்டத்திலுள்ள எனது கடிதத்தில் இந்த 2001ம் ஆண்டு சமாதானத்துக்கான எந்த நம்பிக்கையும் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துள்ளேன்.

எனது கடந்த எட்டாவது கடிதத்தில் இந்த ஒன்பதாவது கடிதத்தை எழுதுகின்றபோது நாட்டில் சமாதானத்துக்கான ஏற்பாடுகள் நடந்திடுமா? அல்லது உக்கிரமான யுத்தம் மீண்டும் மூண்டிருக்குமா? என்ற கேள்வியுடன் முடித்திருந்தேன். இப்போது யுத்தம் மட்டுமேதான் உண்மை என்பதை நாம் தெளிவாகக் காண முடிகின்றது.

எரிக் சொல்ஹேய்ம் விரக்தியின் எல்லைக்குப் போய்விட்டவர் போல் பேசுகிறார். சமாதானம் என்பது வானத்திலிருந்து வரும் ஒன்றல்ல. அது ஒன்றில் அரசியல் தீர்வினால் வர வேண்டும் அல்லது இராணுவத்தீர்வினால் வரவேண்டும். அரசியற் தீர்வு அல்லாத இராணுவத் தீர்வு சில வேளைகளில் வெற்றியைப் பெறக் கூடும் ஆனால் அதனால் ஏற்படும் சமாதானம் மிகவும் தற்காலிகமானதே.

இங்கு அரசியற் தீர்வு என்பது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் மட்டும் தான் வரலாம் என்று பலரும் நினைப்பதால்தான் இன்றைய இந்த நிலை. இப்போதும் சமாதான முயற்சிகள் எனப்படுபவையும் அவ்வாறு கருதி விடயங்களை அணுகுவதால்தான் நோர்வேயின் விசேட தூதுவருக்கும் இந்த விரக்தி நிலை.

**இலங்கையின் சிக்கலான அரசியல் வரலாற்று வளர்ச்சியையும், தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சினைகளையும், அடிப்படையான அபிலாஷைகளையும், புலிகளுட்பட இலங்கையில் இன்றுள்ள வெவ்வேறு அரசியற் சக்திகளினதும் சமூக சக்திகளினதும் உண்மையான நிலைப்பாடுகளையும் அவை ஒவ்வொன்றினதும் உள் நோக்கங்களையும் தெளிவாக விளங்கிக் கொள்வது முதற்பிரதானம்.**

அவற்றினடிப்படையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமே தவிர. மாறாக அவரவர் உதட்டளவில் அவ்வப்போது தத்தமது வசதிக்கேற்பவும் குறுகிய உள்நோக்கங்களுடன் சொல்லுகின்ற விடயங்களை வைத்துக் கொண்டு திடீர் திடீர் முயற்சிகளை மேற்கொண்டால் நிலைமைகள் சிக்கலாகுமே தவிர பயன் ஒன்றுமில்லை.

## நண்பர்களே!

மேலே கூறப்பட்டவை ஒரு புறமிருக்கட்டும், லண்டனிலிருந்து நமது நண்பர் அபிமன்யு என்பவர் பின்வரும் கேள்விகளை எழுப்பி பதில் கேட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

(1) புலிகள் மீது குற்றங்கள் தேடிக் கண்டுபிடித்து விமர்சனம் செய்வதுதான் உங்கள் வேலையா?

(2) புலி மட்டும்தானே சிங்கள அரசுக்கு எதிராகச் சண்டை பிடிக்கிறார்கள்? நீங்கள் சந்திரிகா அரசுக்கு முண்டு கொடுக்கும் வேலையை மட்டும்தானே செய்கிறீர்கள்.

(3) ஆக்கபூர்வமான அரசியற் திட்டம் என்ன? இனப்பிரச்சினைக்கு நீங்கள் முன்வைக்கும் உருப்படியான திட்டம்தான் என்ன?

இந்த நண்பருக்கு நான் பதில் எழுதுகையில் ஒரு விடயத்தை வலியுறுத்த வேண்டியிருக்கிறது. அதாவது நான் சொல்வதெல்லாம் நான் சார்ந்த கட்சி சொல்வதாகவோ, கட்சியின் கொள்கைத் திட்டமாகவோ எடுத்துக் கொள்ள முடியாது. இந்தத் தொடர் கடிதங்கள் முழுவதிலும் எனது அபிப்பிராயங்கள். எல்லாம் தனிப்பட்டவை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அதேவேளை நான் சார்ந்த கட்சியின் பெரும்பாலான செயற்பாடுகளுடனும் நிலைப்பாடுகளுடனும் ஒத்துப் போகின்ற வகையாகவே எனது எழுத்துக்களும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் இந்த நண்பரின் கேள்விகளுக்கு விரிவான பதிலை நான் எழுதினால்தான் முழுமையாகத் தெளிவுபடுத்த முடியும். எனினும் காலம் தாழ்த்தாது பதில் கூற விரும்புவதனால் இங்கு சுருக்கமாக எனது பதில்களைக் குறிப்பிட விரும்புகிறேன். விரிவாக எழுதுவதற்கு பின்னொரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனக் கருதுகிறேன்.

புலிகள் மீது குற்றம் சாட்டுவது, கண்டனம் மற்றும் விமர்சனம் செய்வது என்பது மட்டுமல்ல, மக்கள் விரோத வேலைகள் எங்கு நடந்தாலும், யாரால் மேற்கொள்ளப்பட்டாலும் நாம் கண்டிக்கத் தவறுவதில்லை. நாங்கள் எங்கள் தவறுகளையும் சுயவிமர்சனம் செய்யத் தவறியதில்லை.

ஒவ்வொரு அரசியற் பிரச்சினையின் போதும் ஆக்கபூர்வமான முறையில் மாற்றுத் திட்டங்களை முன்வைப்பதிலும், அவற்றுக்காகச் செயற்படுவதிலும் எப்போதும் முன்னணியில் செயற்பட்டு வந்திருக்கிறோம். இன்றைய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அரசு என்ன செய்ய வேண்டும், மக்களின் பாத்திரம் என்ன? தமிழ்க் கட்சிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பவற்றை வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கு நாம் தவறியதில்லை.

**புலிகளின் பிழைகளும் தவறுகளும் துரோகங்களும், மேற்கொண்டுள்ள நாசகார வேலைகளுமே எமது இன்றைய சமூக நிலைக்கு பிரதானமான காரணங்களாகும். இங்கு விமர்சனம் செய்யாதிருப்பது சமூக நாசத்துக்கு ஒத்துழைப்பதாகவே அமையும். ஹிட்லரை விமர்சித்த சார்லி சப்ளின் தொடக்கம் அல்பேர்ட் ஐன்ஸ்ரீன் வரையானவர்களை ஜேர்மனிய நாசிசவாதம் இப்படித்தான் அப்போது பார்த்தது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். வெறிபிடித்த கொலைகாரர்களுக்கும், அநியாயங்களுக்கும், தவறான அரசியல்களுக்கும் எதிராக கருத்துப் போராட்டம் செய்யாமல் இருப்பதுதான் தவறு.**

மேலும் இன்றைய கொடூரமான சூழ்நிலையில் எம்மையும் எமது கட்சியையும் உயிரோடு தக்கவைப்பது அவசியமாகும். அதற்காக நாம் எந்த கட்டத்திலும் சமூக நலன்களை இரண்டாம் பட்சமாக்கியதில்லை. அப்படிப்பட்டவர்களாக இருந்திருந்தால் நாம் அதனைப் பிரேமதாசாவுடனேயே செய்திருப்போம். ஐந்து ஆண்டுகள் மட்டுமல்ல, ஆள் மாறி ஆளுக்கு வால் பிடித்து இன்று வரை கூட முதலமைச்சராக இருந்திருக்க முடியும். பல நூற்றுக் கணக்கான கோடி ரூபா சொத்துக்களையும் சேர்த்திருக்க முடியும் எமைச் சார்ந்த பலருக்கு நாம் வசதிகள் செய்திருக்க முடியும்.

இன்றைக்கும் புலிகள், சமூகத் தொண்டர் அமைப்புக்கள், ஏனைய கட்சிக்காரர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், கூலி உழைப்பாளர்கள் என்போருடன் ஒப்பிடும் போது எமது கட்சி உறுப்பினர்கள்தான் மிகக் குறைந்த கூலியில், மிகக் குறைந்த வசதிகளுடன் உயிராபத்துக்களையும் எதிர் நோக்கிக் கொண்டு, அரசியல் சமூக களத்தில் சமூகத்திலுள்ள பிரபலங்களுக்கு எதிராக நீச்சல் போட்டுக் கொண்டு மக்களின் எதிர்காலத்துக்காகச் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் என்பதை நேரடியாக நீங்கள் வந்து பார்த்துக் கண்டு கொள்ளலாம்.

## நண்பர்களே!

ஆயுதம் எடுத்துச் சண்டை பிடிப்பதால் மட்டும்தான் அரசியலில் எதையும் சாதிக்க முடியும் என்பது தவறான கருத்தாகும். அப்படியானால் ஆயுதம் தாங்கிச் சண்டைக் களத்தில் நிற்காதவர்கள் எல்லாம் சமூக ஈடுபாடற்றவர்கள் என்று கருத வேண்டியேற்படும். இங்கு புலிகள் நடத்தும் யுத்தம் தவறானது, அவர்களின் பயங்கரவாதம் சமூகத் துரோகமாகும். பல்வேறுபட்ட கருத்துக்களையும் கொண்டவர்கள் ஒரே களத்தில் நின்று போராடிய நிலைமையை சீரழித்தவர்கள் அவர்களே புலிகள் மக்களுக்காகத்தான் போராடுகிறார்கள் என்றால் மக்களை ஏன் அவர்கள் தமது ஆயுத பலத்தால் அடக்கியாள வேண்டும். புலிகள் சர்வாதிப் பகுதி

(தொடர்ச்சி 04பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com



# சக்கடத்தார் — அம்மான் அரட்டை அரங்கம்

**பின்னேரம் ஐந்தரை மணி.**

**இடம்:- வைரவர் கோவிலடி பனைமரத்தடியில் சக்கடத்தாரும் அம்மானும் சங்கமம்**

**சக்கடத்தார்:-** என்ன அம்மான், புளிச்சல் கள்ளைக் குடிச்சு வயிறு ஊதிப் போச்சுது போல?

**அம்மான்:-** பின்னே என்ன ஒரு நாளைக்கு 60,000 போத்தல் கள்ளை கேட்பாரன்றி பண்ணைக் கடலில ஊத்தினமாம். நாங்கள் குடிச்சாவது வயித்தை வளர்த்தா என்னவாம்?

**சக்கடத்தார்:-** ஓம் ஓம் நீங்கள் புள்ளடி போட்டு பாளிமெண்டுக்கு அனுப்பினவையும் அங்க ஒரே பொல்லடியாம். புளிச்சல் கள்ளைப்பத்தியும் வாந்தி எடுக்கிறதைப் பத்தியும்தான் பிரேரணைகள் கொண்டுவந்து ஒரே புளிச்சல் ஏவறைதான் விடுயினமாம்.

**அம்மான்:-** என்ன செய்யிறது - சைக்கிளுக்கு போட்டா சீச்சீக்கு காத்தடிச்ச திருப்தியும் சூரியனுக்குப் போட்டா தந்தைக்குக் குடைபிடிச்ச திருப்தியும் வாற மனத்தோட இருக்கிற சனங்களை எப்படியண்ணை திருத்திறது?

**சக்கடத்தார்:-** உது என்ன கதை? வடமராட்சி உடையார் சொற்படி காலைத் தூக்கடா என்றிருக்கிற எங்கட சனம் எப்ப மாறுமோ தெரியாது?

**அம்மான்:-** உடையாரை நம்பினோர் கைவிடப்படார்.

**சக்கடத்தார்:-** ஓம் ஓம் இருவது வருஷமா நம்பி நம்பி கடைசியா சனம் யாழ்ப்பாணத்தையே கைவிட்டுட்டு ஓடுதுகள். கைவிடப்படாரில்லை அம்மான் கால் விடப்படுவார்.- தென்மராட்சி சனம் மிதி வெடியில காலை விட்டுவிட்டுத்தான் ஓடுதுகள்.

**அம்மான்:-** அது சரி சக்கடத்தார், அது என்ன நோவெண்ணை எரிச்சல் சொலமன் அடிக்கடி பழைய பேப்பர் வாங்கிறவன் மாதிரி ஒண்டுவிட்ட ஒரு நாளைக்கு மல்லாவிப் பக்கம் வந்து போறார்.

**சக்கடத்தார்:-** அஞ்சாம் வகுப்பு ஸ்கொலர்சிப் சோதனைக்கு டியூசன் கொடுக்கிறாரோ தெரியாது.

**அம்மான்:-** எனக்கு பயமென்னவெண்டால் வெள்ளைக்காரன்ற கால்வாய் நோய்ச் சனியனை இங்க கொண்டுவந்து போடுவானோ தெரியல்ல.

**சக்கடத்தார்:-** அவங்கட நாட்டில நாட்டில தடை பண்ணினதையெல்லாம் வழமையா எங்கட நாட்டுக்கு அனுப்பிறவங்கள் இப்பவும் ஏதாவது வழி பண்ணத்தான் பாப்பாங்கள்.

**அம்மான்:-** ஏதோ எங்கட நாலுகால் பிராணியளுக்கு கால் வாய் நோய் வராமல் இருந்தாச் சரிதான்.

**சக்கடத்தார்:-** அதுக்குத்தான் தடை ஊசி போட்டுட்டாங்களே

**அம்மான்:-** எங்கட யானைக்காரன்ர கட்சியிலும் முறுகல் நிலையாம்.

**சக்கடத்தார்:-** 17 வருஷமா எல்லாத்தையும் வறுகினவங்கள் இப்ப ஆள் ஆளுக்கு கோவணத்தை உரியுறாங்கள்.

**அம்மான்:-** சிறியம்மாவிட மகளும் பாவம் 100 பேரில 90 பேருக்கு அப்பத்தை பிரிச்சு கொடுத்துப் போட்டு இனி என்ன செய்யுறது எண்டு யோசிக்குது.

**சக்கடத்தார்:-** உது என்ன அப்பம்? பல்லி முட்டை இனிப்பை உடைச்சு கொடுத்தது மாதிரித்தான்.

**அம்மான்:-** ஆனாலும் எங்கிட ஆளுக்கு தேவாரம் திருவாசகத்தில வாற மாதிரி நாலு வரியில நீண்ட பதவி கொடுத்திருக்கு, வாசிக்கேக்கில தமிழ்ல வாற 256 எழுத்துக்களும் வருகுது.

**சக்கடத்தார்:-** அதுவே அரசியல்ல முத்தியடைஞ்ச மாதிரிதான்.

**அம்மான்:-** அது சரி சக்கடத்தார் மகன்ர பட்டபடிப்பு முடிஞ்சு போச்சே?

**சக்கடத்தார்:-** எங்க முடிக்கிறது? அங்க போய் சண்டித்தனம்தான் படிக்கிறான்.

**அம்மான்:-** சண்டித்தனமோ பாண்டித்துவமோ ?

**சக்கடத்தார்:-** அமிர்தலிங்கம், யோகேஸ், யோகேஸ்ன்ர அப்பாவி மனுசி நீலன் உவையள நாய் சுடுகிற மாதிரி சுடேக்கில வராத சண்டித்தனம் உப்ப பேப்பரில்ல உடையார்ரை படம் போட்டு எழுதினவுடனே - அதை எரிக்கிறதிலதான் சண்டித்தனம் வருகுது.

**அம்மான்:-** குருக்கள் வாயு பறிஞ்சா குத்தமுமில்லை- மணமுமில்லை. ●

# அன்பார்ந்த நண்பர்களு.......

03ம் பக்க தொடர்ச்சி

யில் இருப்பதற்கு மக்கள் ஏன் விரும்பவில்லை. தமக்கு மாறான கருத்துக் கொண்டவர்களை ஏன் புலிகளால் சகிக்கமுடியவில்லை. **மாற்றுக் கருத்தெல்லாம் தேசத் துரோகம் என்றால் பாசிசத்துக்கும் புலியிசத்துக்கும் என்ன வித்தியாசம்.**

புலிகளின் ஆயுதப் போராட்டம் என்பது சமூக இலக்கற்றதாக, பிரபாகரனின் குறுகிய நோக்கத்துக்காக என ஆகிவிட்டது. புலிகளால் தமிழர்களுக்கு எவ்வித நன்மையும இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அறுவடை செய்யப்படமாட்டாது என்பது தெளிவு. புலிகளின் ஆயுத வல்லமையால் தமிழர்களுக்கு இருந்த அத்தனை சாதகமான வாய்ப்புக்களும் நாசமாக்கப்பட்டுவிட்டன. புலிகளின் கைகளில் ஆயுதங்கள் இருக்கும் வரை ஏனையவர்கள் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளுக்காக மக்களை அணிதிரட்டிப் போராட்டம் நடத்துவது சாத்தியமில்லை.

பிரிவினை என்பது வேறு. ஒன்றுபட்ட இலங்கைக்குள் நியாயபூர்வமான தீர்வு என்பது வேறு. முதலாவது சாத்தியமில்லை. புலிகளின் ஆதரவாளர்களிற் பெரும்பாலானோர் கூட அதை நம்பவில்லை. இரண்டாவதான அரசியல் தீர்வானது அரசியற் செயல்முறை மூலம்தான் பெறப்பட வேண்டும். அதற்கு பரந்துபட்ட தமிழ் மக்களின் அங்கீகாரம் வேண்டும். பெரும்பான்மையான சிங்கள மக்களின் சம்மதம், உலக நாடுகளின் ஒத்துழைப்பு வேண்டும். இவற்றை புலிகளால் சாதித்துக் காட்ட முடியாது. இதுவொரு நீண்டகால வேலைத் திட்டம்.

**புலிகள் எம்முடன் ஒத்துழைப்பார்களாக இருப்பின் இப்போதும் கூட மிக உயர்ந்த பட்ச அதிகாரம் கொண்ட மாநில சுயாட்சி எனும் அரசியற்தீர்வை நாம் சாதித்துக் காட்ட முடியும். அல்லது புலிகள் போராட்டத்தை விட்டு ஒதுங்கட்டும் நாங்கள் சாதித்துக் காட்டுகிறோம். எமக்கு ஆதரவான உலக சக்திகள் ஆக்கபூர்வமாக ஈடுபட முடியாமைக்கும் புலிகளே காரணம் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.**

இந்நிலையில் சந்திரிக்கா முன்வைத்த அரசியற் தீர்வை ஏற்று அடுத்த கட்டத்துக்குப் போகலாம் என முயற்சித்தோம். ஆனால் தமிழர் கூட்டணி மற்றும் ரெலோ ஆகியன ஐ.தே.கவுடன் கை கோர்த்து நின்று அதனைச் சாத்திமாகாது செய்தன. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சந்திரிக்காவின் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தியதில் தமிழர்கள் பிரதான பங்கு வகித்தனர். **இப்போது தமிழர்களிற் பெரும்பான்மையினர் எப்போது ஐ.தே.க.வினுடைய ஆட்சி வரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வரும் என எதிர்பார்த்திருக்கின்றனர். அது இலவுகாத்த கிளி கதையே. இன்னுமொரு தடவை தமிழர்கள் ஐ.தே.க. விடம் ஏமாற வேண்டியுள்ளனர் போலும்.**

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கிடைத்திருக்கும் வாயப்பைப் பொறுத்தவரையில் குறைந்த பட்சம் 13வது திருத்தச் சட்டத்தை இந்த அரசாங்கத்தைக் கொண்டு முறையாக நடைமுறைப்படுத்தப் பண்ணி இப்போதிருக்கும் இடைவெளியை நிரப்பி அடுத்த கட்டத்திற்கு வழி வகுக்க முடியும். ஆனால் முன்னர் அதைப்பற்றி பல கூறி வந்த டக்ளஸ் அவர்கள் இப்போது தமது மந்திரிப் பதவியின் அதிகாரங்களையும் மாகாண அரசுடன் பகிர்ந்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதுடன் அரசிலுள்ள சிங்கள இனவாத அமைச்சர்களோடு முரண்படவேண்டியுமிருக்கும் என்பதனால் மாகாண அரசை மீண்டும் முறையாகச் செயற்பட வைப்பதில் அவர் முன்னர் கொண்டிருந்த அக்கறையை இப்போது கை விட்டு விட்டதாகத் தோன்றுகின்றது.


தமிழர் கூட்டணியானது தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கான அரசியற் தீர்வுக்காக ஓர் இயக்கத்தை சுயாதீனமாக நடாத்தத் தயாராக இல்லை. அதனைப் புலிகளிடம் விட்டுவிட்டார்கள். கூட்டணியின் குறிக்கோள் பிரிவினையா என்று கேட்டால் அதுவும் இல்லை என்கிறார்கள். தாங்கள் எதுவும் செய்யாமலே இருந்தால் அடுத்த தேர்தலில் மேலும் அமோகமாக வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு அதிகரித்திருக்கிறது.

அதிக பட்ச அதிகாரங்கள் கொண்ட மாநில அரசொன்றை வடக்கு கிழக்கில் ஏற்படுத்துவதே முதற் தேவையாகும். மத்திய ஆட்சி அமைப்பில் சிறுபான்மை இனங்களுக்கான பாதுகாப்புக்கு முறையான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுடன் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாடு முழுவதிலும் உண்மையான ஜனநாயகம் செயற்பட வேண்டும் இவையே எமது அரசியல் இலக்குகள் இவற்றுக்காக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழ் மக்களின் மத்தியிலும் முற்போக்கான சிங்கள சக்திகளுடன் சேர்ந்து சிங்கள மக்கள் மத்தியிலும், சர்வதேச ரீதியிலும் அரசியற் பிரச்சாரங்களை முன்னெடுத்தல் வேண்டும். அதேவேளை அடிப்படை மனித உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் இழந்து போய் நிற்கும் தமிழ் மக்கள் மத்தியில் அதற்கான இயக்கத்தை நடாத்த வேண்டியுள்ளது.

எமது இலக்குகளைக் குறித்து அரசை நிர்ப்பந்திப்பது, முன்னேற்றப் பாதையில் அரசு ஏதாவது உருப்படியான விடயங்களைச் செயற்படுத்துமாயின் அவற்றை நிறைவேற்ற ஒத்துழைத்தல். மக்கள் மத்தியில் எமது சக்திகளையும் செல்வாக்குகளையும் கால ஓட்டத்தில் அதிகரித்தல் ஆகியன அவசியமாகும். நாம் இவற்றைச் செய்கையில் ஏனைய சக்திகள் கைகட்டிப் பார்த்திருக்கமாட்டா. இது கடும் போராட்டம், எதிர்நீச்சல் ஆகும் நிலவுகின்ற யுத்தச் சூழல், பாதுகாப்புப்பிரச்சினை மற்றும், நிதிப்பற்றாக்குறை என்பன எமது வேலைத் திட்டங்களை மட்டுப்படுத்தியுள்ளன.

இருப்பினும் எம்மால் முடிந்த பங்களிப்பை உளப்பூர்வமாக ஈடுபாட்டுடனும் பிடிப்புடனும் செயற்படுத்துவோம். அழிவுகள் இங்கு ஆதிக்கத்தையும் பாராட்டையும் பெற்றிருக்கின்றபோது ஆக்கப்பூர்வமான வேலைகளின் பலன்கள் காலம் தாழ்த்தியே விளையும்.

**சிறிய அளவாயினும் சரியானதைச் செய்வோம்.**




# மறைந்துபோன வட்டம்

களங்கமற்ற அந்த
முற்றவெளியில்
கோட்டைக்கரைச்சுவரின்
தென்மேற்கு மூலையில்
காலை நீட்டி உட்கார்ந்தேன் -
பொக்கற்றில்
ஒரு வெள்ளைக் கடதாசி.
ஒரு போள் பொயின்ற்
என்னவென்றில்லாமல்
வெள்ளைக் கடதாசியில்
ஒரு வட்டம் கீறினேன்
அந்த வட்டம் உள்ளும் புறமுமாக
எனது கனவுகளையும்
கற்பனைகளையும்
தடையின்றி விரித்தது
என் அகக் கண்களுக்குள்
தெரிந்தவைகள் எல்லாம்
நான் விரும்புபவைகளாவே இருந்தன
பசி தெரியவில்லை உறக்கம்
மயக்கவில்லை
இரத்த ஓட்டம் உற்சாகமாகவே
இருந்தது.

சிறு நேரத்துள் என் அருகில்
அடுத்தடுத்து நண்பர்கள்
நான் கீறிய வட்டத்திற்கு
உள்ளாலும் வெளியாலும்
தமது விருப்பப்படி புள்ளிகள்
போட்டார்கள்
கோடுகளாகவும் ஆங்காங்கே
போட்டார்கள்
அவ்வப்போது எனது காதுக்குள்
ஏதேதோ சொன்னார்கள்
ஒவ்வொருவராகத் தூரம்
போய்விட்டார்கள்.

ஆரம்பத்தில் என்
வட்டத்திற்கு அவர்கள்
பொருத்தமான வடிவம்
இடுவதாகவே எண்ணினேன்
அவர்களின் புள்ளிகளையும்
கிறுக்கல்களையும்
புரிந்து கொள்ள முயற்சித்தேன்
ரசிக்கவும் எவ்வளவோ
முயற்சித்தேன்.
புறக்குழப்பங்கள் எதுவுமின்றி
அகத்துள் கண்டவைகளுடன்
மகிழ்ந்து கொண்டிருந்த -
என் மனதில்
குழப்பங்களே நிறைந்தன
எல்லா நரம்புகளும்
சோர்ந்தன - எங்கு
திரும்பினாலும் கண்கள்
இருட்டடித்தன
பயத்தால் பிடரிக்குளிர்
இருதயத்தில் படபடத்தது.

என்னை நானே உதறி
சுதாகரித்துக் கொண்டேன்
என் கடதாசியில் மற்றவர்கள் இட்ட
புள்ளிகளும் கோடுகளும்
கிரகித்துக் கொள்ளக் கூடிய - எந்த
வடிவத்தையும் எனக்குத் தரவில்லை.
மற்றவர்கள் இட்டதையெல்லாம்
தனித்து விட்டு
என் பழைய வட்டத்தை
மட்டும் என என்னால்
பார்க்கமுடியவில்லை - ஆனால்
என் பொல்லாத மனம் மீண்டும்
மீண்டும் - என்
கண்களை அந்தக் கடதாசி
நோக்கியே தள்ளியது
என் கையில் அந்தக்
கடதாசி மட்டுமே
அதைக் கிழித்தெறியாத வரை
என் மனம் ஒரு
கரையேறாதது கண்டேன்.

எழுதப்படாத எண்ணங்கள்
குழம்பிக் கொண்டேயிருக்கும் -
இன்னொரு
வெள்ளைக் கடதாசிக்காக
காஞ்ச நெருஞ்சிகளுக்குள்
என் கால்கள
மீண்டும் பதிந்தன

**கொட்டடியான்**

படிப்பகம்

www.padippakam.com






# கருத்துச் சுதந்திரத்தின் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை

அமுது சஞ்சிகையை யாழ்பல்கலைகழக மாணவர்கள் சிலர் எரித்தது ஜனநாயக உணர்வு கொண்டவர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

ஒரு பத்திரிகையில் வரும் கருத்துத் தொடர்பாக மாறுபட்ட அபிப்பிராயம் இருப்பின். அதனை பதில் கருத்தின் மூலமே எதிர்கொள்ள வேண்டும். அல்லாமல் பத்திரிகையைச் சந்தியில் போட்டு எரிப்பது ஜனநாயக விரோதச் செயலாகும். கருத்துச் சுதந்திரத்தின் மீது பிரயோகிக்கப்படும் வன்முறையுமாகும்.

இத்தகைய செயல்கள் மூலம் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நியாயபூர்வமாக எதையாவது செய்ய முற்பட்டால்கூட அதன் தார்மீக தகுதி பற்றி கேள்வி எழுப்ப முடியும்.

நாகரீகமான பெரும்பான்மை பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்த அநாகரிகமான செயற்பாட்டில் எதுவித சம்பந்தமும் இல்லையாயினும் அவர்கள் இதற்கு தமது எதிர்ப்பை தெரிவிப்பதும் இத்தகைய தான்தோன்றித்தனமான செயல்களில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்துவதும் அவர்களுடைய கடமையாகும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆசிரியர்கள் மாணவர்கள் ஊழியர்கள் அடங்கிய யாழ் பல்கலைக் கழக சமூகத்திடம் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

# பல வருட காலமாக உவர் நீரை அருந்தும் பரிதாபநிலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை உட்பட்டதுமான வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்டதும் மாநகர சபைக்குள் உட்பட்ட கிராமங்களான புதூர், சேற்றுக்குடா,திமிலைத்தீவு, வலையறவு, வீச்சுக் கல்முனை, திருப்பெருந்துறை, பூம்புகார், போன்ற கிராமங்களில் குடிப்பதற்கு பொருத்தமற்ற உவர் நீராகவே காணப்படுகின்றது. இந்த உவர் நீர் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து காணப்படுகின்றது.

மேலும் இப்பகுதி மக்கள் அடிப்படைத் தேவைகளுக்கு இந்த நீரை பயன்படுத்துவதால் இக் கிராம மக்கள் சுகாதார சீர் கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்தக் கிராமங்களில் 4000 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றனர். இக் கிராமங்களில் கல்வி, சுகாதாரம், இருப்பிடம், போக்குவரத்து போன்ற வசதிகள் பின்தங்கியுள்ளன. இந்தக் கிராமங்களில் வாழும் மக்களில் கூடுதலானோர் மீன்பிடித் தொழிலையும், கூலித் தொழிலையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் இவர்கள் குடிப்பதற்குரிய நன்னீரைப் பெறுவதற்கு மட்டக்களப்பு நகரில் உள்ள குழாய்களிலேயே பெற வேண்டும். குழாய்களில் குறிப்பிட்ட ஒரு சில நேரத்திற்கே நீரை பெற முடியும். இதனால் இவர்கள் தங்கள் வேலைகளுக்கு உரிய நேரத்தில் செல்லமுடியாது சிரமத்திற்கும் உள்ளாகின்றனர்.

மாநகர சபை தண்ணீர் தாங்கி லொறிகள், டிராக்டர்கள் மூலம் குடிநீர் வழங்குகிறதெனினும் அது அடிப்படைத் தேவைகளுக்கே போதியதாக இல்லை. இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கேட்டு பல பத்தாண்டுகளாகியும் இன்னும் விடிவு ஏற்படவில்லை.

**மட்டுநகர்-மதன்**

# மறைந்தோர் மாண்பு

## திரு.கே. பூரணம்பிள்ளை



ஹாட்லிக் கல்லூரி, யாழ், பரியோவான் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர் பூரணம்பிள்ளை அவர்கள் லண்டனில் காலமானார்.

சிறந்த கல்விமானான அவர் 23 வருடங்கள் ஹாட்லிக் கல்லூரியிலும் 7வருடங்கள் பரியோவான் கல்லூரியிலும் பணியாற்றினார்.

சிறந்த கல்விமானும் நற்பிரஜையுமான அவர் இலங்கை பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர் கே.பி. ரத்நாயக்கா, கணிதப் பேராசிரியர் எலியேசர் போன்ற தலை சிறந்த மாணவர்களை உருவாக்கினார். அன்னாரின் மறைவுக்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## திரு. பாரதிநேசன் சின்னத்தம்பி



இடதுசாரி சிந்தனையாளரும், எழுத்தாளரும், தான்கொண்ட கொள்கையை தனது இறுதி மூச்சுவரை கடைபிடித் தவருமான திரு பாரதிநேசன் சின்னத்தம்பி அவர்களின் மறைவுக்கு நாம் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

வடமராட்சியைப் பிறப்பிடமாக் கொண்ட திரு சின்னத்தம்பி அவர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்தார். 60களின் முற்பகுதியில் ஏற்பட்ட பிளவையடுத்து சண்முகதாசன் அவர்களின் தலைமையிலான சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் பணியாற்றினார். இலங்கை மின்சார சபையின் ஊழியரான அவர் 60களின் நடுப்பகுதியில் இருந்து பீக்கிங் வானொலி தமிழ் பிரிவில் பணியாற்றினார்.

சீனாவில் 70களின் பிற்பகுதியில் ஏற்பட்ட சீர்திருத்தங்களையடுத்து அவர் நாடு திரும்பினார். அதன் பின்னர் போரும் அவலமும் நிறைந்த சூழலில் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்தார். அவரின் வாழ்விடமான வட்டுக்கோட்டையிலும் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களின் பேரன்பை பெற்றிருந்தார்.

கொண்ட கொள்கைகளுக்காக வாழும் மனிதர்களை காணக்கிடைக்காத காலத்தில் திரு சின்னத்தம்பி போன்றவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

அன்னாரின் மனைவியாருக்கும், பிள்ளைகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப் தனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## திரு.க. நவரத்தினம்



இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு கந்தையா நவரட்ணம் கொழும்பில் காலமானார்

யாழ் இந்துக் கல்லூரியில் ஊழியராக கடமையாற்றிய திரு நவரட்ணம் அவர்கள் சிறந்தவொரு விளையாட்டு வீரரும் கூட.

யாழ் குடா நாட்டில் தீண்டாமைக்கான வெகுஜன இயக்கங்களிலும், தொழிலாளர் விவசாயிகளின் இயக்கங்களிலும் ஒரு செயலூக்கமுள்ள பங்காளராக இருந்தார். பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த காலத்தில் தமிழ் மக்கள் மீது ஐ.தே.க அரசினால் இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்து குரல் எழுப்பினார்.

அன்னாரின் குடும்பத்தினருக்கும்; கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சமூகத்தில் அக்கறை கொண்டவர்கள் இத்தகைய காரியத்தில் ஈடுபடமுடியாது

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கூட்டுறவு சங்கங்கள் சமாஜங்களை தமக்கு வரி செலுத்துமாறு புலிகள் நிர்ப்பந்தித்து வருகிறார்கள். சங்கானை, மானிப்பாய், திருநெல்வேலி சங்கங்களுக்கு ஏற்கனவே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் சங்கத் தலைவர் தாக்கப்பட்டுள்ளார். தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்க சமாஜத்தின் தலைவர் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார். மற்றும் சில சங்கங்களின் தலைவர்களும் தமது பொறுப்புக்களிலிருந்து அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகவுள்ளதாக அறியமுடிகிறது. சங்கானை கூட்டுறவு சங்கம் மூடப்பட்டு தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுதுறையானது சேவை நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும் நியாயவிலையில் பொருட்கள் மக்களுக்கு கிடைப்பதற்கும் உற்பத்தியாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்கும் என்ற உயரிய நோக்கங்களுடன் இயங்கி வருகின்றது.

அச்சுறுத்தி இச் சங்கங்களை மூடச்செய்வதன் மூலம் தமது ஜீவனோபாயத்துக்கு இச் சங்கங்களையே நம்பியுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மிக மோசமான பாதிப்புக்குள்ளாகின்றனர்.

கடந்த காலத்தில் கூட்டுறவுதுறை சீரழிந்து கீழ்நிலை அடைந்ததற்கு இவர்களின் தலையீடுகளே காரணமாய் அமைந்தன. தற்போது சாடையாக கூட்டுறவுதுறை துளிர்விடத் தொடங்கியவுடன் தமக்கு வரி செலுத்துமாறு நிர்ப்பந்திக்கிறார்கள்.

சமூகத்தில் அக்கறை கொண்டவர்கள் இத்தகைய காரியங்களில் ஈடுபட முடியாது. ஏற்கனவே சமூகம் சார்ந்த பல்வேறு துறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் சமூகத்தின் முன்னோக்கிய செயற்பாடுகளை தடைசெய்துள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம், இயல்பு சூழ்நிலை என்று அடிக்கடி வலியுறுத்தும் புலிகள் இயக்கத்தினர் கூட்டுறவு சங்கங்களின் சுயாதீனமான செயற்பாட்டில் தலையிடுவது எவ்வாறு சரியாகும்.?

கூட்டுறவு துறையை சீர்குலைக்கும் வரி செலுத்த நிர்ப்பந்திக்கும் இந்தச் செயற்பாட்டை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் தம்பிராசா- சுபத்திரன் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

# யாழ், மேதின அதிர்...........

07ம் பக்க தொடர்ச்சி

வடக்கு வலிகாமத்தில் நீங்கள் எங்களை மீளக்குடியேற அனுமதிக்காவிட்டால் நாங்கள் உங்களை மீறி செல்ல வேண்டிய சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டாம் என்று டக்ளஸ் தேவானந்தா அவர்களையும், அவரது அரசாங்கத்து அம்மையாரையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டம் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் **யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. குகேந்திரன் உரையாற்றும்** போது நாங்கள் இந்த அரசாங்கத்தில் பங்காளியாக இருந்து செயற்படுகிறோம் என்றால் அதற்குக் காரணம் மக்களின் நிரந்தரமான வாழ்வுக்கு அத்திவாரம் இடுவதற்காகவே சேர்ந்து செயற்படுகிறோம். யாரையும் காட்டிக் கொடுப்பதற்காகவோ போராட்டத்திற்கு எதிராகவோ அல்ல என்பதை ஆணித்தரமாக கூறிவைக்க விரும்புகிறேன். அமைச்சுப்பதவியை ஏன் எடுத்தோம் மக்களாகிய உங்களுக்குச்சேவை செய்வதற்காக மாத்திரமேயன்றி எந்த சுயநலத்திற்காகவும் இல்லை.

இந்தத் தமிழர் விடுதலை கூட்டணியினர்தான் இரத்தப் பொட்டுவைத்து எங்களை ஆயுதபாணிகளாக்கி எங்களை இந்த நிலைக்குத் தள்ளியவர்கள், இவர்களுடைய வீர தீர பேச்சுக்களால் எங்களுடைய தேசம் இன்றைக்கு எங்கே போயிருக்கிறது. போராட்டம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது. சர்வதேச மட்டத்தில் நாங்கள் எடுத்த பெயர் தமிழ் பயங்கரவாதம் ஏன் இந்த நிலை வந்தது? சகோதரப் படுகொலைகள் மூலம் எதையும் சாதிக்க முடியாது.

ஈ.பி.டி.பி. எந்த காலத்திலும் சமாதானத்திற்கோ பேச்சுவார்த்தைக்கோ இடைஞ்சலாக இருக்க மாட்டார்கள் விடுதலைப் புலிகள் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வரும்பட்சத்தில் ஈ.பி.டி.பி கட்சியை கலைத்துவிட தயார் என்று எங்கள் தலைவர் கூறியுள்ளார். எங்களுக்கு போட்டி அரசியல் தேவையில்லை.

**ஐக்கிய இலங்கை ஸ்தல தொழிலாளர் சங்கத்தின் மேதினக் கூட்டம் இராஜசிங்கம் வீதி திருநகரில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய யாழ் மாநகர சபை உறுப்பினர் ம. மங்களநேசன்** ஒன்றுபட்டுச் செயற்பட்டால் உங்கள் பிள்ளைகளை எதிர் காலத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாக்க முடியும். எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன்.

மாநகர சபை உறுப்பினராக பதவியேற்ற நாள் தொடக்கம் எனது கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப் உம் நானும் உங்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் பிரச்சினைகளை வெளி உலகம் அறிந்துக் கொள்வதற்காக சரியான பாதையில் கால் வைத்திருக்கிறீகள் இது முன்னேற்றத்தின் முதற்படி என்று குறிப்பிட்டார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் மேதினக்கூட்டம் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையக மண்டபத்தில் கட்சியின் **பொதுச் செயலாளர் சி.கா. செந்தில்வேல்** தலைமையில் நடைபெற்றது. அவர் அங்கு உரையாற்றுகையில் சேர். பொன் இராமநாதன், ஜி.ஜி.பொன்னம்பலம், அமிர்தலிங்கம், வே. பிரபாகரன் உள்ளிட்ட தமிழர்களின் வரலாறு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

கடந்த 20 வருடங்களாக துப்பாக்கி ஏந்தியவர்கள்தான் எம்மை வழி நடத்தி வந்துள்ளனர். இவர்களாலேயே எமது மக்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல் பேசவோ, அரசியலில் ஈடுபடவோ அல்லது மக்கள் போராட்டம் நடத்தவோ இவர்கள் எவரும் அனுமதிக்க வில்லை.

ஆயுதம் ஏந்திய எங்களுக்குப் பின்னால் நில்லுங்கள் உரிமைப் பெற்றுத் தருவோம் என்று மக்களை அரசியலில் இருந்து இவர்கள் ஒதுக்கியே வைத்திருந்தார்கள்.

www.padippakam.com



# புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவம் —

# ஜெகான் பெரேரா (ஒரு விமர்சனப் பார்வை)




தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகளே. யாழ் மக்களின் மனநிலை இதுதான் என தேசிய சமாதானப் பேரவையின் தலைவரும் வடபகுதிக்கு விஜயம் செய்த தேசிய சமாதானப் பேரவையின் பிரதிநிதிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் அடங்கிய குழுவின் தலைவருமான ஜெகான் பெரேரா தெரிவித்துவிட்டதாக தமிழ் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருந்தன.

இவ்வேளையில் ஏகப்பிரதிநிதிகள் என்ற கோஷம் பற்றியும் ஜெகான் பெரேரா தலைமையிலான தூதுக் குழுவினரை சந்தித்து அவ்வாறு கருத்துக் கூறியவர்கள் யார் என்பது தொடர்பாகவும் எடுத்து நோக்குவது அவசியம்.

இங்கு இடம் பெறும் போராட்ட சூழலில் இழப்புக்களையே சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் வடபகுதியில் இருப்பதை போலவே இந்தப் போராட்ட சூழலில் லாபமடைந்தவர்களும் இருக்கிறார்கள். நிலைமைக்கேற்றவாறு தங்களை தகவமைத்துக் கொண்டு வாழும் வகை தெரிந்தவர்கள் வல்லமை பெற்றவர்கள் இருக்கிறார்கள்.

நீண்டகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் காரணமாக அவர் இவர் என்றில்லாமல் இங்கு வாழ் மக்கள் அனைவருக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்கவில்லை.

ஆனால் இந்த மக்களில் ஒரு பகுதியினரே பாரிய இழப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை. யுத்தத்தால் வீடு, வாசல்களை, சொத்துக்களை இழந்தவர்கள் இருக்கிறார்கள். யுத்தத்தால் கல்வியை, தொழிலை இழந்தவர்கள் இருக்கிறார்கள். இந்தப் போராட்டத்திற்காக அவற்றை உதறித் தள்ளியவர்கள் இருக்கிறார்கள். கொடூரமான யுத்தத்திற்கு மத்தியிலும் கல்வி கற்கும் வாய்ப்பை பெற்றவர்கள் இருக்கிறார்கள். யுத்தத்தின் காரணமாக சிறந்த தொழில் வாய்ப்பை பதவி உயர்வுகளை பெற்றவர்களும் இருக்கிறார்கள்.

யுத்தத்தை காரணம் காட்டி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து தனது சகோதரிகளுக்கு பல லட்சம் சீதனம் கொடுத்து திருமணம் செய்யும் அகதிகள் இருக்கிறார்கள். இந்தப் போராட்டத்திற்கு பங்களிப்பு செய்த ஒரே காரணத்தால் அகதிகளாக இந்தியாவில் உள்ள முகாம்களில் அரை வயிறு கால்வயிற்றோடு வாழும் அகதிகள் இருக்கிறார்கள்.

யுத்தத்தால் அவயங்களை இழந்தவர்கள் இருக்கிறார்கள். யுத்தத்தால் தமது பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர் இருக்கிறார்கள். இன்னும் இந்தப் போராட்டத்தில் பங்காளிகளாகிப்போன தமது பிள்ளைகளை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்ட பெற்றோர்கள் இருக்கிறார்கள். வெறுமனே அமைதியை, ஆறுதலை இழந்துவிட்டோம் என்று ஏங்குபவர்களும் இருக்கிறார்கள் எனவே இழப்புக்கள் எனும்போது அந்த இழப்புக்கள் அளவில் தன்மையில் மாறுபட்டவையாக இருப்பதை அவதானிக்கலாம். இந்த இழப்புக்கள், வாய்ப்புக்களின் தன்மைக்கேற்பதான் ஒவ்வொருவரின் கருத்துக்களும் இருப்பதை நாம் முதலில் நினைவில் கொள்ளல் வேண்டும்.

வடக்கு கிழக்கை பொறுத்தவரை ஏற்கனவே இங்கு ஒரு அரசியல் அணி சேர்க்கை இடம் பெற்றுவிட்டது. அது புலிகளுக்கு சார்பான அணியாகவும், புலிகளின் தவறான போக்குகளுக்கு எதிரான அணியாகவும் பிரிந்திருப்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாது. இவ்வாறு அணிசேராது இரண்டு பக்கங்களிலும் உள்ள நியாய அநியாயங்களை அறிந்து ஆராய்ந்து நடுநிலை வகிப்பவர்களும் இல்லாமல் இல்லை. இங்கு புலிகளுக்கு சார்பான அணியினர் தமக்கு எதிரான அணியினரின் நடவடிக்கைகள் நடத்தைகள் குறித்து பகிரங்கமாக, வெளிப்படையாக கருத்து கூறுவதற்கும் விமர்சிப்பதற்கும் இயலும். அவ்வாறே நடுநிலை வகிப்பவர்களுக்கும் இயலும்.

ஆனால் புலிகளுக்கு எதிரான அணியை சேர்ந்தவர்கள் தமது கருத்துக்களை எள்ளளவும் வெளிப்படையாக தெரிவிக்கமுடியாத ஒரு சூழல் நிலவி வருகிறது. நடுநிலை வகிப்பவர்களும் புலிகளின் நடவடிக்கைகளை பகிரங்கமாக விமர்சிக்கத் தயாரில்லாத நிலை காணப்படுகிறது.

இத்தகைய ஒரு நிலைமை வடக்கு கிழக்கில் மாத்திரமல்ல இலங்கைத் தமிழர்கள் வாழுகின்ற இடங்களிலெல்லாம் அவர்கள் இவ்வாறானதொரு ஒடுக்கு முறைக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

இதனால் இராணுவத்தினரைப் பற்றி பதவியில் உள்ள அரசாங்கத்தை பற்றி தமிழ் அரசியல் கட்சிகளைப் பற்றி விமர்சிப்பவர்கள் எவரும் புலிகளின் நடவடிக்கைகளைப் பற்றி விமர்சனம் செய்ய கருத்துகூற முன்வருவதில்லை.

எனவே இங்கு நிலைமையை அவதானிக்க விரும்புவர்கள் யாராகயிருந்தாலும் அவர்கள் சந்திக்கின்ற நபர்களை பொறுத்ததாக மாத்திரமல்ல அவர்களை சந்திக்கின்ற முறை. சந்திக்கின்ற இடம் என்பவற்றைப் பொறுத்தும் அவர்களின் கருத்துக்கள் அமைகின்றன என்பதுதான் உண்மை.

தமிழ் பிரமுகர்கள், உயர் அதிகாரிகள் மத நிறுவணங்கள், தொழிற் சங்கங்கள், வெகுஜன அமைப்புக்கள் மாணவர் ஒன்றியங்கள், பத்திரிகையாளர்கள், பத்திரிகைகள், அரசியல்வாதிகள், ஏன் தமிழ் அரசியல் கட்சிகள் கூட இந்தச் சூழ்நிலையின் கைதிகளாக செயற்பட்டு வருவது தமிழ் சூழலின் யதார்த்தமாகும். இவற்றை விளங்கிக் கொள்ளாமல் இவற்றை மறைத்து தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார் என்பதை கண்டுபிடிக்கப் புகுவது கண்டுபிடித்துக் கூறுவது அறிவுடமையாகாது.

இராணுவத்தினர்,பொலிசார், தமிழ் கட்சிகளைச் சேர்ந்தவர்களை விசாரித்து எச்சரிக்கவும், தண்டனை வழங்கி சிறையில் அடைக்கவும் அதிகாரம் கொண்டவர்களாக திகழும் வடபகுதி நீதிமன்றங்கள் புலிகளிடமிருந்து கடிதம் வந்தவுடன் நீதிமன்ற நடவடிக்கைகளை இடைநிறுத்திக் கொள்ள வேண்டியிருப்பதை காண்கிறோம்.

பொதுமக்கள் திரும்ப திரும்ப எழுதுகின்ற விண்ணப்பங்களை, வேண்டுகோள்களை கிடப்பில் போட்டு விடுகின்ற அரசாங்க அதிகாரிகள், அரசாங்க உத்தரவுகளை செயற்படுத்துவதில் அசமந்தமாயிருக்கும் அதிகாரிகள், தமிழீழ நிர்வாக சேவையின் கடிதத் தலைப்பில் வரும் கடிதங்களுக்கு மட்டும் அவற்றிற்கேற்ப துரிதமாக செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்தைக் காண்கிறோம்.

நாளைய பத்திரிகையில் வந்த செய்திக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். ஆசிரியத் தலையங்கம் எதைப்பற்றி எழுதப்பட வேண்டும் என்பவையெல்லாம் பத்திரிகை காரியாலயத்திற்கு வரும் இணந்தெரியாத இளைஞர்கள் கூறுவதைக் கேட்டு அல்லது அண்ணையவை தந்தவை என்று ஒரு சிறுவன் கொண்டுவந்து கொடுக்கும் துண்டு காகிதத்திற்கேற்ப எழுத வேண்டிய நிர்ப்பந்தத்தில் தான் யாழ்ப்பாண பத்திரிகைகள் இயங்கி வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், வர்த்தகர்கள் நிலைமை இதைவிட பரிதாபகரமானது.

மாணவர் அமைப்புக்கள், கலை இலக்கிய அமைப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் வெகுஜன அமைப்புக்கள், பத்திரிகைகள், கூட்டுறவு சங்கங்கள் என்று அனைத்தையும் பல வருடங்களாக தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த புலிகள் இன்று அவற்றை தனித்துவமாக, சுயமாக இயங்க அனுமதித்திருக்கிறார்கள், இவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்கள் சுயாதீனமானவை என்று யாராவது கூறினால் அதனைவிட பம்மாத்து, ஏமாற்று வேறு ஒன்றுமில்லை.

இந்த பின்னணியை வாழ்க்கைச் சூழலை மறந்து ஜெகான் பெரேரா தலைமையிலான குழுவினரின் யாழ் விஜயம். அந்தக் குழுவினரை சந்தித்துப் பேசியவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இவை குறித்து கலாநிதி ஜெகான் பெரேரா அவர்கள் தெரிவித்ததாக பத்திரிகைகளில் வெளியான செய்திகள் என்பவற்றை எடைபோடுபவர்கள் யாராக இருந்தாலும் தவறிழைக்க நேரிடும். இந்தப் பின்னணியை தமிழ் மக்களின் வாழ்நிலையை விளங்கிக் கொண்டவர்கள் இந்தக் கருத்துக்களையும் விளங்கிக் கொள்வர்.

புலிகளின் அடக்கு முறைகளை, ஆதிக்கவெறியை ஏற்காது எதிர்த்துக் குரலெழுப்பியதால் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்த போதும் வாழும் உரிமை மறுக்கப்பட்டபோதும் உயிராபத்துக்களுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் எதிர்ப்புக் குரல் எழுப்பிக் கொண்டிருப்பவர்கள் புலிகளை வெளிப்படையாக விமர்சிப்பவர்கள் ஒரு சில தமிழ்க்கட்சிகளை சேர்ந்தவர்கள் மாத்திரமே. வேறு யாரும் புலிகளின் குறை குற்றங்களை கதைத்து உயிரைவிடத் தயாரில்லை.

ஏற்கனவே புலிகளால் தண்டனைத் தீர்ப்பு எழுதப்பட்ட தமிழ்க்கட்சிகளை சார்ந்தவர்கள் மட்டுமே அதற்குத் தயாராகவுள்ளனர். ஆனால் யாழ்ப்பாணம் வருகை தந்த தூதுக் குழுவினர் இந்த வகையான தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்திக்கவில்லை. அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழுகின்ற அகதி மக்களை அவர்களின் பிரதிநிதிகளை சந்திக்கவில்லை.

அண்மையில் தென்மராட்சியிலிருந்து உடமைகளை கைவிட்டு இடம் பெயர்ந்து சண்டை ஓய்ந்த பின்னரும் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாத முடியாமல் தொழில் வாய்ப்பை இழந்து அன்றாட சீவியத்திற்கு கஷ்டப்படும் மக்களை சந்திக்கவில்லை.

அதேவேளை பொது அமைப்புக்களின் பெயரில் புலிகளுக்கு சார்பாக பேசி வருகின்ற அரசியல் கட்சிகள் சார்ந்தவர்களை தேசிய சமாதானப் பேரவை பிரதிநிதிகளும், பத்திரிகையாளர்களும் சந்தித்துள்ளனர். அது மாத்திரமல்ல யாழ்ப்பாணத்தின் மூத்த பிரஜைகள் சார்பிலும், சமயப் பெரியார்கள் என்ற மகுடத்துடனும் யாழ் பல்கலைக்கழகத்தின் சார்பிலும் ஒருவர் வெவ்வேறு அமைப்புக்களின் பிரதிநிதியாக சந்திப்புகளில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்திருப்பதையும் அறிய முடிகிறது.

இவர்கள் புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கருத்துத் தெரிவித்திருப்பதில் வியப்பேதும் இல்லை. ஆனால் அதுவே தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தாகிவிடாது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் கணிசமான மக்கள் வெளிப்படையாக புலிகளை ஆதரித்து பேசியவர்கள் கூட புறந்தள்ளி இந்தத் தேர்தல்களில் போட்டியிட்டவர்களுக்கு வாக்களித்து தெரிவு செய்துள்ளனர். இவர்கள் எல்லோரும் சாராயத்திற்கும், சாரத்திற்கும் வாக்களித்தவர்கள் என்று புறக்கணிப்பது ஏகப்பிரதிநிதிகள் என்று பேச முற்படுவது மக்களின் உணர்வுகளை கொச்சைப் படுத்துவதாகும்.

இவற்றை விளங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு கலாநிதி ஜெகான் பெரேராவும் அவரது தலைமையில் வந்த குழுவினர் அனைவரும் மட்டமானவர்கள் இல்லை. அவர்கள் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் தம்மைச் சந்தித்த சிலர் குழுவாக வரும்போது ஒரு விதமாகவும், தனியாக சந்திக்கும் போது வேறுவிதமாகவும் கருத்துக் கூறியதை அவதானித்ததாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் எதையும் தமக்கு சாதகமாக்கிக் கொள்ள புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் எடுக்கும் தீவிர பிரயத்தனமே பத்திரிகை செய்திகள்.

புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கோஷமிடுபவர்கள் அதற்குள் மறைந்திருக்கின்ற அபாயங்களை உணர்ந்து கொள்ளாமல் அல்லது அதனால் பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள் தாங்கள் இல்லை என்ற நினைப்பில் இந்த கோஷத்தை முன்வைப்பதாகவே எண்ண வேண்டியுள்ளது. யானை தனது தலையில் தானே மண்ணை வாரி இறைத்தது போல.

ஏனெனில் ஏகப்பிரதிநிதிகள் என்ற கோஷம் இன்னொரு வகையில் சர்வாதிகாரத்திற்கே வழி வகுக்கும். எனவே உலகில் சர்வாதிகாரம் தலையெடுத்த நாடுகளிலெல்லாம் மக்கள் அனுபவித்த இன்னல்கள் குறித்த படிப்பினைகளுக்குப் பின் அநீதிக்கெதிராக,அடக்கு முறைகளுக்கெதிராக 50வருடங்களுக்கு மேலாக போராடிவரும் தமிழ் சமூகம் சர்வாதிகாரத்தை ஏற்கத் தயாராகியிருப்பதாக கூறுவது எமது இதுவரைகால போராட்டத்தை, அதன் நோக்கத்தை கேலி செய்வதாகும்.

விலங்கு தங்கத்தில் செய்யப்பட்டிருந்தாலும் யாரும் அதனை தாங்களாகவே தங்கள் கைகளில் பூட்டிக் கொள்ள விரும்பமாட்டார்கள். ஒடுக்கு முறையானது தமிழர் தரப்பிலிருந்து வந்தாலும் அது ஒடுக்கு முறையே.

சமூகம் வர்க்க ரீதியாகவும், மத ரீதியாகவும், சாதி ரீதியாகவும், பால் ரீதியாகவும் சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுடன் பிரிந்திருக்கிறது. இந்தச் சமூகம் அரசியல் ரீதியாக ஏகப்பிரதிநிதித்துவத்தை ஏற்றுக் கொண்டிருப்பதாக கூறுவது உண்மைக்கு மாறானது. தகுந்த வேலைத் திட்டத்தினை முன்வைத்து இவர்களை ஐக்கியப்படுத்தி ஓரணியில் நின்று ஒரே குரலில் எமது கோரிக்கைகளை வலியுறுத்த முனைவது மெச்சத்தக்க செயல்.

அதனைவிடுத்து குறுக்கு வழியில் சமூக யதார்த்தங்களை மறந்து தமிழ் மக்கள் ஏகப்பிரதிநிதித்துவத்தை ஏற்றுக் கொண்டிருப்பதாக முழங்குவது தங்களையும் ஏமாற்றி மக்களையும் ஏமாற்றுவதாகும்.

புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறிவரும் மதப் பெரியர்களுக்கு ஒரு விடயத்தை பணிவோடு கூறவிரும்புகிறேன். எம் மத்தியில் பல்வேறு மதங்கள், மதப் பிரிவுகள் சிறியவை பெரியவை என்ற பேதமில்லாமல் அங்கீகரிக்கப்பட்டிருப்பதோடு எந்தவொரு தனிமனிதனும் தனது விருப்பத்திற்கேற்றவாறு ஒரு மதத்தை பின்பற்றுவதற்கு உரிமையுடையவராகின்றார். இவ்வாறு ஒரு மதத்தை பின்பற்றுவதும் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் சமய அனுட்டானங்களை மேற்கொள்ளுவதும் போதிப்பதும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உள்ள அடிப்படை உரிமையாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமான உரிமை ஒன்று கூடும் உரிமை. அரசியல் உரிமை போன்றவையும் அடிப்படை உரிமைகளே. புலிகள் தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற தங்கள் கூற்று இவற்றை மறுதலிக்கும் விதமாக இதர தமிழ் அரசியல் கட்சிகளை சார்ந்தவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதை நியாயப்படுத்துவதாக மூடிமறைப்பதாக அமைந்திருப்பதை தாங்கள் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யார் என்பதை அறிய விரும்புவர்கள் முதலில் தமிழ் மக்கள் சுதந்திரமாக பகிரங்கமாக பேசக்கூடிய சூழலை ஏற்படுத்தியாக வேண்டும். அவ்வாறன்றி தமிழ் மக்களின் பிரதிநிதிகளை கண்டுபிடிக்க முனைவது இருட்டு வீட்டுக்குள் கறுப்பு பூனையை தேடுவது போலாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# யாழ், மேதின அதிர் வேட்டுக்கள்


ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கம்


கிராமிய உழைப்பாளர் சங்கம்

நீண்ட இடைவெளிக்குப் பின் யாழ் குடா நாட்டில் இவ்வருடம் மேதின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது. யாழ் பிராந்திய தொழிற்சங்கங்கள் இணைந்து நடாத்திய மேதின கூட்டம் யாழ்ப்பாணம் நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் **தபால் தந்தி ஊழியர் சங்கத்தின் சார்ப்பில் உரை யாற்றிய இ. மயில் வாகனம்** "தொழிலாளி வர்க்கத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளை தட்டிக் கேட்பதற்கு குடாநாட்டில் இன்று வீதிக்கு வீதி சிவப்புக் கொடி மிகவும் மகிழ்ச்சி" என்று குறிப்பிட்டதனை எடுத்துக் காட்டுவதாகவிருந்தது.

இக்கூட்டத்திற்கு வடபிராந்திய தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் தவராஜா அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தொழிலாளர்கள் மனந்திறந்து பேசுவதற்கு உரிமை உண்டு. தொழிற்சங்கங்களின் கூட்டு மேதினம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே இதைத்தான் சொல்ல வேண்டும் இதைச்சொல்லக் கூடாது என்று நாங்கள் வரையறை விதிக்கவில்லை.

தொழிலாளர்கள் மத்தியில் உழைக்கின்ற மக்கள் மத்தியிலே இப்போது பல தரப்பட்ட கருத்துக்கள் நிலவிக் கொண்டிருக்கிறது. இவற்றை உள்வாங்கி காலப்போக்கில் எது சரி எது பிழை என்று சிந்தித்துச் செயலாற்றக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்கி இம் மேதினத்தை நடாத்திக் கொண்டிருக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

அவர் குறிப்பிட்டவாறு மேற்படி மேதின நிகழ்வில் கலந்துக் கொண்ட அமைப்புக்களின் மேதின கோஷங்கள் வேறுபட்டதாயிருந்ததை காணக்கூடியதாயிருந்தது.

குறிப்பாக பல்கலைகழக ஊழியர் சங்கம் வெளியிட்ட துண்டு பிரசுரத்தில் விடுதலைப் புலிகளுடன் பேசு என்ற கோஷம் பிரதான கோரிக்கையாக இருந்தது. உள்ளூராட்சி


ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி


ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

எழுதுவினைஞர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம், சீமேந்து பொதுத் தொழிலாளர் யூனியன், இலங்கை வர்த்தக கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கம், வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கம் போன்ற தொழிற் சங்கங்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

**மூத்த தொழிற்சங்கவாதிகளான கணபதிப்பிள்ளை, சிவராஜா ஆகியோரும் வங்கி ஊழியர் சிவபாலன் அவர்களும் உரை நிகழ்த்தினர்.**

திரு. சிவபாலன் உரையாற்றுகையில் வெற்று கோஷங்களை முன்வைத்துச் செல்வதில் எவ்வித பயனுமில்லை. முன்வைத்த கோஷங்களுக்கேற்ப நாம் செயற்பாடுகளில் இறங்கியுள்ளோமா என்ற கேள்வியை எங்களை நாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும். இரண்டு தசாப்தங்களாக நடக்கும் போராட்டத்தில் எத்தனை தொழிலாளர்கள் அங்கவீனர்களாகி போயுள்ளனர். இதுபற்றி தொழிற்சங்கங்களிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? இந்த நாட்டில் தொழில் சட்டங்கள் பற்றி தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறோமா? இது போன்ற பல கேள்விகளை எம்மை நாமே கேட்க வேண்டிய சூழலில் தான் இந்த மேதினத்தை கொண்டாடுகிறோம்.

இங்கு யுத்தம் பற்றி பலரும் பேசினார்கள் ஆயுதம் தாங்கியவர்களை அழிப்பதுதான் யுத்தம் என்று நாங்கள் கருதுகிறோம். எங்களுக்கு முன்னால் தெரிகிற யுத்தம் இதுதான். ஆனால் தான் சார்ந்த அரசியலை தொடர்ந்து செய்வதுதான் யுத்தம். பல பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை பூதாகரமாக்கியதில் அவர்களுக்கும் பெரும் பங்குண்டு பத்திரிகைகளை எடுத்துப் பாருங்கள் எத்தனையோ கட்டுரைகள் சொன்னதை, சொல்வதை திருப்பி திருப்பி சொல்வதாக உள்ளது.

பிரச்சினை என்ன வென்றால் உண்மையானதை சொல்லக் கூடிய நிலைமை இன்னும் வரவில்லை. இந்தச் சூழலை உருவாக்க வேண்டியதும் எங்கள் பணி என்று தெரிவித்தார்.

**சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் முன்னாள் தலைவரும் மூத்த தொழிற்சங்க வாதியுமான க.கணபதிபிள்ளை அவர்கள்** உரையாற்றும் போது நாங்கள் உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்பதற்குப் பதிலாக வட பிராந்திய தொழிற்சங்கங்களே ஒன்று படுங்கள் என்ற கோஷத்தை முன் வைக்கலாம் என்று எண்ணுவதாக குறிப்பிட்டார்.

தொழிலாளர் வர்க்கத்திற்கு தொழிலாளர் தலைமை தாங்க வேண்டும். எழுது வினைஞர் சங்கத்திற்கு எழுதுவினைஞர் தான் தலைவராக வேண்டும். அப்புகாத்தோ, பிரக்கிராசியோ, பாராளுமன்றப் பிரதிநிதியோ அதற்கு தலைமை வகித்தால் அது தொழிற்சங்கம் அல்ல. தொழிற்சங்கம் உருப்படவும் முடியாது என்றார்.

**இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த மூத்த தொழிற் சங்கவாதியான வே. சிவராஜா அவர்கள்** உரையாற்றுகையில் இது வர்க்கப் போராட்டமோ சமூக மாற்றத்துக்கான யுத்தமோ அல்ல. இதனால் வரக்கூடிய தீர்வு கூட ஒரு பூர்சுவா தீர்வாக இருக்குமானால் நிச்சயமாக தொழிலாளி வர்க்கத்திற்கு சாதகமான தீர்வாக இருக்க முடியாது.

எவ்வாறாயிருப்பினும் இந்த யுத்தம் எங்களைத்தான் பாதிக்கின்ற காரணத்தினால் இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு நாங்களும் குரல்கொடுக்க வேண்டும். இது தொழிலாளர் வர்க்கத்தின் கடமை என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

**இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் த. பஞ்சலிங்கம் அவர்கள் பேசுகையில்** ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு உரிமை உட்பட எமது உரிமைகள் இன்று எங்கே இருக்கின்றன? என்னைப் பொறுத்த வரையில் ஒன்றிலுமே மனித உரிமை என்பது பேணப்படவில்லை.

மிக அண்மையில் எனது நண்பர்கள் சிலர் வன்னிக்கு இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிக்குச் சென்று வந்தார்கள். அவர்கள் சொன்ன ஒரு வார்த்தை, அங்கு தங்கியிருந்த 5 நாட்களிலும் சுதந்திரக் காற்றை சுவாசித்தோம் என்று சொன்னார்கள் இது பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டும்.

ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து எமது இனத்துக்கு அழிவை தேடித்தருபவர்களை அவர்களின் இடத்தைவிட்டு துரத்துவோம் என்பது அவர் விடுத்த மேதின அறைகூவலாகும்.

வடபிராந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளர் க. தியாகலிங்கம் அவர்கள் பேசுகையில் 1977ம் ஆண்டு ஐ.தே.க அரசாங்கம் அடுத்த கொச்சைப்படுத்தலை செய்தது. தொழிலாளர் தினத்தை கொண்டாடுவது போல நடித்து வட இந்தியாவிலிருந்து வருகின்ற ஹிந்தி நட்சத்திரங்களை கொண்டு மேதினத்தை ஒரு தமாஷாக, களியாட்டு விழாவாக நடாத்தத் தொழிலாளர்கள் விட்டில் பூச்சிகளாக உண்மையை மறந்து இன்றைக்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று தனதுரையில் சுட்டிக் காட்டினார்.

**உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் கலந்துக் கொண்ட செ. சண்முகராஜா** உரையாற்றுகையில் 1980ம் ஆண்டு பொது வேலை நிறுத்தத்தின் போது ஜே.ஆர். அரசாங்கம் சகல தொழிற்சங்கங்களையும் தடை செய்து அவர்களின் உரிமைகளைப் பறித்து தொழிற்சங்கம் இயங்க முடியாத நிலையை உருவாக்கி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை வேலையிலிருந்தும் வெளியேற்றியதனால் தமிழர், சிங்களவர் என்றில்லாமல் பலர் வேலையிழந்து தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்ட அந்த நேரத்தில் யு.என்.பி அரசாங்கத்தின் வால்பிடியாக இருந்து வேலை நிறுத்தம் குறித்தும் தொழிற்சங்கங்கள் சீரழிக்கப்பட்டது .குறித்தும் கண்ணை மூடிக் கொண்டிருந்த தமிழ்க் கட்சி கூட இன்று மேதினம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணம் வேம்படி வீதியிலுள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் கட்சியின் அமைப்பாளர் தேவகுலநாயகம் தலைமையில் நடைபெற்றது.

அவர் தனது உரையில் இந்த யாழ் மண்ணில் நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்களை புலிகள் விரட்டியடித்தார்கள் அவர்களது உடைமைகள் அனைத்தையும் பறித்தெடுத்தார்கள். இன்று அந்த மக்கள் புத்தளத்தில் படாத துன்பமில்லை. அந்த மக்கள் வாழ்ந்த இடங்களில் வாழ்வதற்கு எங்கள் தமிழ் மக்கள் எந்த அருகதையும் அற்றவர்கள். இரண்டு நாட்களுக்கு முன் வீடுகளைப் பார்க்கச் சென்ற முஸ்லீம் மக்களை அடித்துக் காயப்படுத்தியுள்ளர்கள். அவர்களுக்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே ஒரு துரோகத்தை செய்திருக்கிறார்கள் திரும்பவும் இது போன்ற செயலை செய்வது பொறுக்க முடியாதது. அரசியல் நோக்கங்களுடன் இதை செய்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய **எஸ். தங்கவடிவேல் அவர்கள்** நீங்கள் அகதிகளாக ஓடுவதற்கும், உங்கள் வாழ்க்கை சீரழிவதற்கும் காரணம் எல்லாமே நீங்கள்தான் ஒரு காலத்தில் 500கண்டு வெங்காயத்தில் ஒரு வீட்டைக் கட்டினோம் 1000 கண்டு வெங்காயத்தில் ஒரு மாளிகை அமைத்தோம். இந்த நாடு பற்றி எரிவதற்கு காரணம் நீங்கள்தான். கனடாவிலே ஊர்வலம். விடுதலைப் புலிகள் வென்றுவிட்டார்கள். மக்கள் தோற்றுக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

புத்தபிக்கு அரசியலில் தலையிடுவதாக குற்றம் சொல்கிறார்கள் இங்கு எத்தனையோ மதத்தலைவர்கள் தேவையில்லாமல் அரசியலில் ஈடுபடுகிறார்கள் இது மட்டும் உங்களுக்குப் புரியவில்லை.

யாரை குறை சொல்கிறீர்கள். இந்தியா வந்தது. வடக்கு கிழக்கு மாகாண சபை கிடைத்தது. யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை வரை வீதி அமைத்துத் தருவதாக சொன்னார்கள். எந்த இடத்திலும் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடக்கவில்லை. அந்த மாகாண சபையை பலப்படுத்தி உரிமைகளை எடுத்திருக்கலாம். இந்த அரசியல் இந்தளவிற்கு வந்ததற்கு காரணம் நாங்கள். நாங்கள் யாரையும் விட்டு வைக்கவில்லை. யாரையும் நேசிக்கவில்லை. எல்லோருடனும் பகைத்தோம். அடுக்குவசனப் பேச்சுக்களைத்தான் காட்டினோம். இனியாவது நாங்கள் அரசியல் தெளிவு பெறவேண்டும் என்றார்.

**கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் மேதினக் கூட்டம் ஏழாலை சிறீ முருகன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.**

சங்கத்தின் சார்பாக திரு இன்பம் அவர்கள் உரையாற்றுகையில் இந்த உழைக்கும் மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளை ஒன்றுபட்டுத்


தமிழர் விடுதலைக் கூட்டணி

தீர்ப்பதற்காக இந்தத் தேசத்தின் மிகப்பலமான சக்தியாக திகழுகின்ற உழைக்கும் மக்கள் அவர்களுக்கென்று பலமான தனித்துவமான ஸ்தாபனம் இல்லாததனால் அவர்கள் தங்களுடைய உரிமைகளை பெற முடியாமல் தங்களுடைய தேவைகளையும், துயரங்களையும், இழப்புக்களையும் சந்தித்துக் கொண்டிருக்கின்ற போது இங்கே அபிவிருத்தி என்ற போர்வையில் உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அபிவிருத்தி யாருக்கு? எங்கே நடக்கின்றது என்று நாங்கள் ஆராய்ந்து பார்க்கின்ற போது எங்களுக்கு மிஞ்சுவது ஏமாற்றம்தான்.

**திரு. மகாலிங்கம் அவர்கள் உரை யாற்றுகையில்** எங்கள் விழாவிற்கு உதவுங்கள் என்று எல்லா அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். எங்கள் விழாவிற்கு வந்து எங்கள் நிலைமையை பாருங்கள் என்று கோரிக்கை விட்டிருக்கிறோம்.

ஆனால் அரசியல் வாதிகளை நம்பத்தயாரில்லை. நம்பக் கூடாது என்பதை வலியுறுத்திச் செல்கிறோம். புள்ளடி போடுகின்ற காலங்களில் மட்டும் அவர்கள் எங்களை தேடி வருகிறார்கள் பின்னர் மறந்துவிடுகிறார்கள் அவர்கள் அவர்களுடைய வேலையை பார்க்கட்டும் நாங்கள் எங்கள் கால்களில் தங்கிநின்று எங்கள் வேலையைப் பர்ப்போம். எங்கள் பலத்தில் நின்று சாதிப்போம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்பாடு செய்திருந்த மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய **பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கள்** இன்று தமிழ் மக்களில் பெரும்பாலான தொழிலாளர்கள் திக்கற்ற நிலையிலே அகதிகளாக நாடெங்கும் அகதி முகாம்களில் வாழுகின்ற துர்ப்பாக்கிய நிலை.

விவசாயிகளுக்கு போதியவசதி வாய்ப்புக்களும் கிட்டுவதில்லை. வன்னியில் இருக்கின்ற விவசாயிகள் தம்முடைய விளைபொருட்களை பதனிட்டு விற்று அனுபவிக்க முடியாத நிலை. அரச கட்டுப்பாடுகள், இடப்பெயர்வுகள் எமது பிரதேசத்திலிருந்து முஸ்லீம் சகோதரர்கள் உட்பட பலர் இடப்பெயர்வின் மூலம் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

தந்தை அவர்களோடும் அவருடன் இணைந்த தளபதிகளுடனும் உருவாகிய இந்த இயக்கம் இன்று பக்குவமாக தமிழ் மக்கள் மத்தியிலே அடுத்த சந்ததியினர் முன்னெடுத்துச் செல்வதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் இவர்கள் தங்கள் கடமையில் தவறியிருந்தால் தங்களுடைய கடமையில் பின் வாங்கியிருந்தால் இந்த நாட்டிலே அடுத்த சந்ததியினர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியுமோ என்பதுதான் கேள்வி.

தந்தையையும், தளபதிகளையும் அவர்களுக்குப் பின்னால் நின்று அந்தப் போராட்டங்களில் இழப்புக்களுக்கு மத்தியிலும். தோளோடு தோள் கொடுத்த தமிழ் மக்களையும்

**யாழ் மேதின செய்தித் தொகுப்பு கே. மோகன்**

நன்றியுணர்வுடன் இந்தத் தொழிலாளர் தினத்தில் நினைவு கூருவது எமது கடமை என்று தெரிவித்தார்.

இறுதியாக **யாழ் மாவட்ட பா.உ மாவை சேனாதிராஜா உரையாற்றுகையில்** நாங்கள் ஒரு தேசிய இனம் என்பதை ஒரு போதும் மறந்து விடாதீர்கள். நாங்கள் எங்களை ஆளுகின்ற உரிமை உடையவர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். இந்த நாட்டு அரசாங்கங்கள் எங்களுக்கு ஆட்சியுரிமை வழங்க இன்னும் தயாரில்லை.

ஆனபடியால் இந்த மேநாளில் விடுகின்ற அறைகூவல் அழைப்பு விடுதலை புலிகள் உட்பட அனைத்து இயக்கங்களும் அனைத்து மக்களும் ஒன்றாகத் திரண்டு, மக்கள் இயக்கத்தை நடாத்துவதற்கு நாங்கள் ஆயத்தமாக வேண்டும். எங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். ஒற்றுமை ஏற்பட வேண்டும் அந்த காலம் வந்துவிட்டது. இந்தப் பிராந்தியத்திலே இந்தியாவின் அனுசரனை எமக்கு இருக்க வேண்டியது அவசியம்.

(தொடர்ச்சி 05பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com



# இந்திரா ஒரு கிட்டப் பார்வை

இந்திரா பிரியதர்ஷினி ஜனித்த போதிலிருந்தே அவர் வாழ்வில் ஒருவித காவியத் தன்மை கப்பிக் கொண்டது. "நீ பிறந்த அதே மாதத்தில்தான் இந்தியாவில் இருந்து பல்லாயிரம் காத தூரத்தில் ரஷ்யப் புரட்சியும் பிறந்தது" என்று மகளின் 13ஆவது பிறந்த நாளுக்கு அவரது அப்பா எழுதிய கடிதத்தில் நெகிழ்ந்தார்.

தன் மகளைக் கொண்டாட நேரு எழுதிய கடிதங்களின்படி இந்திரா "புயலும் பிரச்சினைகளும் மிக்க" உலகில் பிறந்து "இன்னொரு யுகப் புரட்சி"யை நோக்கி வளர்ந்தார். சரித்திரம், போராட்டம், விடுதலை என்று காட்சிகளை அரங்கேற்றத் துவங்கியிருக்க, 'இந்துபாய்' என்று செல்லமாய் அழைக்கப்பட்ட அந்தச் சிறுமி அந்தஸ்தும் தனிமையும் ததும்பிய அலகாபாத் 'ஆனந்த பவனி' லிருந்து தில்லியின் 1,சப்தர்ஜங் ரோடுக்கு தன் பயணத்தைத் துவங்கினாள். இந்தியா மொத்தமும் வாய் பிளக்கும் படியான பிரமிப்பு, ஆச்சரியம், பயம், துக்கம் இழையோடிய பயணம் அது.

சரித்திர மேக மூட்டத்திடையே சிக்கியிருந்த திருமதி இந்திராவை மீட்க கேத்தரீன் ஃப்ராங்க் போன்ற ஒரு வாழ்க்கைச்சரித ஆசிரியர் வர வேண்டியிருந்தது. அவர் 20ம் நூற்றாண்டின் மாபெரும் புதிரான ஒரு பெண்மணியின் வாழ்க்கையை புத்தகமாக வடிக்கையில் பக்கத்துக்கு பக்கம் ஏக்கங்கள், பெருமூச்சுக்கள், அபிலாஷைகள், பதவி மோகம். காதல்ரசம், வலிய வந்த தியாகிப்பட்டம் என்று கசியும் பன்முகத் தன்மை கொண்ட ஒரு நிஜக்கதை உருவாகிறது.

பிறந்தநாள் துவங்கி தீவிரவாதிகளின் குரூர தோட்டாக்கள் முற்றுப் புள்ளி வைக்கும் வரையிலான அவரின் வாழ்க்கை அசாதாரணமானதுதான். அவரையாருமே அப்பா, அம்மா, காதலர், நண்பர், மகன்கள் - முழுசாகப் புரிந்துக் கொண்டிருப்பார்களா என்பது சந்தேகம்தான். அவர் வீட்டிலும் இருந்தார்.

அதே சமயம் நாடெங்கும் சுற்றினார். தன் புத்தகத்தில் இந்திராவின் அந்தரங்கத்தை கதையின் சாயலுடன் டாக்குமெண்டரியின் யதார்த்தத்துடன் விவரிப்பதில் கேத்தரீன் வெற்றி பெற்றிருக்கிறார்.

இதன் சுவையான பகுதியாக அதிகம் பேர் அறியாத இந்திராவின் குழந்தைப் பருவத்தைச் சொல்லலாம் தனிமையும் நோயும் (சுவிட்சர்லாந்தில் இருந்த தினங்கள்) வாட்டிய நாட்கள். விவரமறியாமலே சரித்திரத்தின் அங்கமாகிடத் துவங்கிய தருணங்கள்.

வீட்டில் நேருவின் மகள் புத்திசாலித்தனமான பிஞ்சில் பழுத்த போக்குகளுடைய சிறுமி. ஆனால் அவரது அத்தை அவரை "அசிங்க மூஞ்சி, மக்கு," என்று கூப்பிட்டதால் ரொம்ப மனக்காயம் பட்டிருக்கிறார். தன் கண் முன்பே நோயல் கரைந்து கொண்டிருந்த அம்மாவைக் கண்டு கதி கலங்கியிருக்கிறார்.



இந்த உலகத்துக்கு நேர்மாறான இன்னொரு உலகையும் அவர் சந்தித்தார். அது மோதிலால், ஜவஹர்லால், காந்தி என்ற மும்மூர்த்திகள் ("பிதா, மகன், பரிசுத்த ஆவி") கொண்ட உலகம். அவரின் புதிரான குணாம்சத்திற்கு ஆரம்பத்திலேயே அறிகுறிகள் தென்பட்டன. "அவர் நினைத்ததை சாதிக்க அவர் கையாண்ட உத்தி, சாப்பிட மறுப்பதல்ல, பேச மறுப்பதுதான். சின்ன வயதில் சரியான வாயாடி அவர்.

ஆனால் பருவமெய்தியதும் தனக்கு மாறான எதற்கும் - பேச்சிலோ, கடிதம் மூலமோ- பதிலளிக்காமல் மௌனம் சாதிப்பதன் மூலம் சூழ்நிலையை தனக்கு சாதகமாக்கும் வித்தையைக் கற்றுக் கொண்டார்." கே த்தரீனுக்கு ஆள் மனம் அறியும் 'சைக்கோகிராபி' அருமையாகக் கை கொடுக்கிறது.

இந்தக் கலை அவர் இந்திரா, நேரு, கமலா நேரு ஆகியோருக்கிடையேயான முக்கோண உறவை விவரிக்கையில் மிளிர்கிறது - அசாதாரண சம்பவங்களால் செலுத்தப்படும் மகள், உபதேசங்கள் உதிர்க்கிற அறிவு ஜீவித்தனமான அப்பா, இவர்கள் யாரோடும் ஒன்ற முடியாத அம்மா, இந்திரா நிஜமாகவே என்ன நினைக்கிறார் என்பதை வெளிக்காட்டியதில்லை. மாறாக அசாதாரண கணங்கள் தந்த பாடங்களை ஓசையின்றி உள்வாங்கிக் கொண்டார். பின்னாளில் அவை ஆங்காங்கே வெளிப்பட்டதுண்டு. இந்தப் புத்தகத்தில் மிகவும் சர்ச்சைக்குரியதாகச் சொல்லப்படும் பகுதிகளில்கூட - இந்திராவின் காதல் விவகாரங்கள், அவரது வேதனை மிக்க திருமண வாழ்க்கை-தனித்துத் தெரியும் அம்சம், உணர்வு ரீதியாக யாருக்கும் பணிந்து போக பிடிவாதமாக அவர் மறுத்ததுதான்.

இந்திராவின் காதலர்கள்கூட - நம்ப முடியாத, பழிவாங்கும் புத்தியுள்ள எம்.ஓ.மத்தாய், காரியம் சாதித்துக் கொள்ளும் தினேஷ் சிங்- அவரை சொந்தம் கொண்டாட அவரிடம் தரவில்லை. அவர் ஃபெரோஸ் காந்தியை உரிமை கொண்டாட நினைத்தார்.

ஆனால் ஃபெரோஸோ, தான் நேரு பரம்பரையில் எப்போதுமே 'வெளி ஆள்' என்பதை போர்குணத்தின் மூலம் வெளிக்காட்டுவதிலேயே குறியாக இருந்தார். தனது அமெரிக்கத் தோழி டோரதி நார்மனுக்கு எழுதிய கடிதத்தில் இந்திரா புலம்பினார் "இன்னொரு மனிதருடன் முழுமையான நேர்த்தியான உறவு கொள்ளும் போதுதான் ஒருவரின் ஆளுமை முழுமையாக வளர்ந்து மலரும் என்று நான் நினைக்கிறேன். அந்த வகையில் வாழ்க்கையின் அந்த அருமையான அம்சத்தை இழந்ததில் எனக்கு வருத்தம்தான்."

சம்பவங்களில் நாடக விறுவிறுப்பையும் நாடக மாந்தருள் மானுடத்தையும் கொண்டுவரும் கேத்தரீனின் திறமை அபாரம். மறக்க முடியாத அந்த வரலாற்றுக் கணங்களை விவரச் செறிவுடன்-மோதிலால் பருகிய 'ஹேய்க் டிம்பிள்' ஸ்காட்ச் முதல் மொரார்ஜியின் "இந்தப் பொண்ணு சொன்னா கேட்கமாட்டாயா" அலுப்பு வரை-படம் பிடித்திருக்கிறார்.

ஆனால் சரித்திரத்தின் பின்னணியில் விவரிக்கப்படும் இந்திராவின் வாழ்க்கை, போகப் போக இந்திய மொழியில் எழுதப்பட்ட கிரேக்க சோகக் காப்பியமாகி விடுகிறது. வெளிஉலகிலும், உள் மனதிலும் மிகையான 'ஆக்ஷன்' நிறைந்ததோர் வாழ்க்கை அது. இந்திரா பிரியதர்ஷினியின் சோகம், அவர் இரத்தத்தை உறிஞ்சிய இந்த மண்ணில் இனி வரும் காலங்களிலும் நினைவு கூரப்படும்.

**நன்றி:- இந்தியா டுடே**

# உருவாகிய ஐக்கியம் தொடர வேண்டும் வளர வேண்டும்



மலையகத்தில் சம்பளப் போராட்டத்திற்காக மக்கள் ஒருங்கிணைந்து பங்கு கொண்ட சத்தியாக்கிரக இயக்கம் சாதி, மத, இன வேறுபாடுகளுக்கப்பால் மலையகத்தின் பிரதான சக்திகளை ஒன்றுபட வைத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதோர் விடயமாகும்.

வேலை நிறுத்தப் போராட்டம், மெதுவாக வேலை செய்தல், போன்ற பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை மேற் கொள்வது மலையகத்தில் வழமையாக இருந்தது. ஆனால் அண்மையில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் தலைமையில் கூலி உயர்வு கேட்டு ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் மலையக மக்களின் ஒரு பெரும் எழுச்சி இயக்கமாக மாற்றியமை கவனத்துக்குரியதாகும்.

அரசியல் ரீதியான ஒடுக்கு முறைகளுக்கு இன்னும் முழுமையான தீர்வுகள் கிடைக்கவில்லை. அடிப்படை உரிமைகள் அடிக்கடி மறுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மக்கள் போராட்டங்களே வழியாகும். இதற்கு ஒற்றுமை அவசியமாகும். ஒற்றுமையின் மூலமே மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். ஒற்றுமை மூலமே மக்களை சரியாக சிந்திக்க வைக்க முடியும்., ஒற்றுமை மூலமே மக்கள் மத்தியில் நம்பிக்கைகளை வளர்க்கமுடியும்.

கடந்த காலங்களில் ஒரு தொழிற் சங்கம் போராட இன்னொரு தொழிற் சங்கம் அதற்கெதிராகச் செயற்படும் நிலை இருந்தது. இதனால் பலியாகிய தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் ஒன்றிணையாதா என்று ஏங்கிக் கொண்டிருந்தன. மலையகத் தொழிற் சங்கங்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்ற தமது உணர்வை வெளிக்காட்ட முடியாத நிலையில் தொழிலாளர்கள் காணப்பட்டனர்.

ஆனால் இன்று தொழிலாளர்களோடு சமூகத்தில் உள்ள பல தரப் பட்டவர்களும் இணைந்து நின்று ஐக்கியத்தை வலியுறுத்தியுள்ளனர். மலையக மக்கள் சமூகத்திலும் கல்வியறிவு கொண்டவர்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள் என்பதையும் இன்றைய ஒற்றுமைக்கான குரல்கள் தெளிவாக்குகின்றன.

மலையக மக்களின் ஐக்கியம் உரிமைக் குரலாக இம்முறை மேதினத்தில் வெளிக்கொணரப்பட்டது. இந்தக் கூட்டு மேதினம் இலங்கை தொழிலாளர்காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய தொழிற்சங்கங்கள் இணைந்து கூட்டு மேதினமாக கொண்டாடியமை மக்களின் நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டியுள்ளது. ஆயுதங்களினால் அல்ல அகிம்சாவழியில் ஒற்றுமையாக போராடுவோம், உரிமைகளை வென்றெடுப்போம் என்ற மக்களின் குரல்களில் நம்பிக்கையை ஏற்படுத்தின.

மாறுபட்ட கருத்துக்களால் வலுவிழந்து காணப்பட்ட மலையக அரசியல் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் இன்று ஓரணியில் இணைந்திருப்பது இந் நாட்டில் உள்ள பேரினவாதிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாகவே தெரியும்.

இலங்கையில் இம்முறை இடம் பெற்ற மேதினத்தை நோக்கும் போது பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்துக் கொண்ட மேதினமானது மலையகத்தில்தான் நடைபெற்றது.

ஏற்கனவே தொழிலாளர்களின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு கிடைக்காததன் எழுச்சிதான் மேதினத்தில் மக்கள் காட்டிய ஒற்றுமையின் வெளிப்பாடு. ஒற்றுமை மூலமே தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட முடியும் என மக்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

ஆளும் பொது ஜன முன்னணியினதும் ஐ.தே.க வினதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பேதமற்ற நிலையில் தொழிலாளர்களின் உரிமைக்காக ஒன்றிணைந்துள்ளார்கள்.

கடந்த காலங்களில் தொழிற் சங்கத் தலைமைகளுக்குள் நிலவிய பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகளுக்காக அவை ஓரணியில் நிற்கத் தயாராக இல்லாமையினால் தொழிலாளர்கள் கயிறறுந்த பட்டங்களாக, தொழிற்சங்கங்கள் இருந்தும் அவை இல்லாதவர்கள் போல இருக்க நேரிட்டது.

தோட்டத்துறையானது தனியார் கம்பனிகளிடம் நீண்டகாலக் குத்தகைக்குக் கைமாறிய பின் தொழிலாளர்களின் சலுகைகள், உரிமைகள் பல இழக்கப்பட்டு விட்டன. மக்கள் இவற்றிற்காக குரல் கொடுத்த போதோ, போராட்டம் நடத்தும் போதோ அரசு தலையிட்டு பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காண முடியாத அளவுக்கு கம்பனிகள் தேசிய, சர்வதேச ரீதியிலும் பலம் பொருந்தியதாக இருந்தன.

அவை தொழிலாளர்களின் உரிமைக் குரல்களை மேலெழவிடாது நசுக்கிவிடுவதில் திறமை காட்டின. தொழிலாளர்களின் போராட்டங்களைப் பின்னடைய வைக்கும் வல்லமை கொண்டிருந்தன.

கம்பனிகள் தொழிற் சங்கங்களின் தலைவர்களுடன் ரகசிய ஒப்பந்தங்களை செய்துக் கொண்டு தொழிலாளர்களின் உரிமைகளுக்கு ஆப்பு வைத்தாற் போல் செயற்பட்டன. தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைப் பொருளாதார உரிமைகளுக்காகவும், பேரினவாதிகளுக்கு எதிராகவும் மலையக மக்கள் உறுதி பெற்றிருக்க வேண்டுமானால் மலையகத்தில் ஐக்கியப்பட்ட தொழிலாளர்கள், ஒற்றுமைப்பட்ட தொழிற் சங்கங்கள் எனவும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராடுபவையாகவும் இருத்தல் வேண்டும்.

இனி வரும் காலங்களில் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு அவற்றைக் கண்காணிப்பதற்கான வழி வகைகளைத் தொழிற் சங்கங்கள் உருவாக்கி வைத்திருத்தல் வேண்டும்.

**குறிஞ்சி - குமார்**

படிப்பகம்

www.padippakam.com



# இனப்பிரச்சினை தீர்விலிருந்து எப்போதும் சறுகும் ஐ.தே.க

ஐக்கிய தேசிய கட்சி இரட்டை வேடத்தையல்ல, பல வேடங்களை தாங்கி நடித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு என்று வரும்போது எப்படிக் கட்டை போடலாம், எப்படி தனது பேரினவாத அரசியலை நடத்தலாம் என்றே அந்தக் கட்சி சிந்திக்கிறது.

பொதுஜன முன்னணி அரசு சமஷ்டி முறையில் தீர்வு என்று சொன்னால் ஒற்றை ஆட்சிக்குள்தான் தீர்வு. பொலிஸ், காணி அதிகாரம் பகிர்ந்து கொடுக்க கூடாது என்று இடைஞ்சல் செய்கிறது.

இந்தக் கட்சியில் காலஞ் சென்ற தலைவர்களான ஜே.ஆர். பிரேமதாசா போன்றவர்களும் இனப்பிரச்சினை கொழுந்து விட்டு எரிகையில் அதன் தகிப்பிலேயே தமது அரசியலை நடத்தியவர்கள்.

தமிழ் மக்கள் மீது அடுத்தடுத்து இனப்படுகொலை வன்முறை தாக்குதல்களை நடத்தி தமது பேரினவாத விசுவாசத்தைக் காட்டியவர்கள். கடந்த வருடம் ஆவணி மாதம் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் தீர்வு யோசனைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது அதனை பாராளுமன்ற மேசைகளில் வைத்து எரித்து வேடிக்கை காட்டியவர்கள்.

எந்தத் தீர்வுத்திட்ட யோசனைகளும் மகா சங்கத்தின் அனுமதியின்றி நிறைவேற்றப்படக்கூடாது என படு வஞ்சகத்தனமான நிலைப்பாடுகளை எடுத்தவர்கள்.

எல்லா விதமான அதிகார துஷ்பிரயோகங்கள், சட்ட மீறல்கள், படு



கொலைகளுக்கெல்லாம் முன்னுதாரணமாக திகழ்ந்த ஐக்கிய தேசிய கட்சி இன்று சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு, சுதந்திர நீதிச் சேவைகள் ஆணைக்குழு, சுதந்திர பொதுச் சேவைகள் ஆணைக்குழு, சுதந்திர தேர்தல் கமிஷன் என்று பட்டியலிடுகிறது.

ஆனால் மருந்துக்கும் இனப்பிரச்சினை பற்றி தொடவே இல்லை. போதாக்குறைக்கு இந்த கோரிக்கைகளை நிறைவேற்றினால்தான் இனப்பிரச்சினை தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும் என்று ரணில் பேரம் வேறு பேசுகிறார்.

நோர்வேக்கு விஜயம் செய்த ரணில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆரவாரமாக அறிக்கை விட்டார்.

அவர் இங்கு நடக்கும் மனித படுகொலைகளையோ, பாலியல் பலாத்கார படுகொலைகளையோ, ஜனநாயக விரோத செயற்பாடுகள் பற்றியோ எப்போதும் மூச்சு விட்டதில்லை.

அவர்கள் பதவியை பிடிப்பதற்கு எவை தேவையோ அவற்றைப்பற்றியே பேசுகிறார்கள்.

அவர்களுடைய கோரிக்கைகள் தமிழ் மக்களை பொறுத்த வரையிலோ அல்லது முஸ்லீம், மலையக மக்களை பொறுத்தவரையிலும் இரண்டாம் பட்சமானவை அல்லது அக்கறைக்குரியனவல்ல.

இனங்களின் சுய நிர்ணயத்தை மறுக்கும் ரணில் பொலிஸின் சுயாதீனத்தைப்பற்றி பேசுகிறார். இந்த நாட்டில் பொலிஸ் துறையை சுதந்திரமாக விட்டால் என்ன நடக்கும் என்பது கற்பனை பண்ணி பார்க்க முடியாத விடயம்.

நூல் நிலையம் எரிப்பு, பல இன வன்முறைகள், சித்திரவதைகள் பாலியல் பலாத்காரம் போன்றவற்றில் பாதாள உலக கோஷ்டிகளுடன் உள்ள தொடர்புகளால் செல்லித்துப் போயிருப்பது இந்தத் துறையாகும்.

இது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிவிலியன் அரசாங்கம் ஒன்றின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும். இல்லாவிடில் இதன் செயற்பாடுகள் பற்றி அரசு பதிலளிக்க முடியாததாகிவிடும்.

பட்டலந்தை படுகொலைகளுடனும், உடுகம்பொல போன்ற கொலைகாரர்களுடனும் சகவாசம் வைத்துக் கொண்டவர்களுக்கு இதன் பாரதூரத்தன்மை புரியாமல் இருக்கலாம்.

ஆனால் ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் போன்றவர்களுக்கு இந்த மாதிரியான விடயம் விளங்காமல் போனதுதான் ஆச்சரியம். அவர்களும் இந்த நாட்டின் எரியும் பிரச்சினையிலிருந்து விடயங்களை திசை திருப்ப முனையும் உப்பு சப்பற்ற விடயங்களுடன் தம்மை மட்டுப்படுத்திவிட முனைகிறார்களா தெரியவில்லை.

சீழ் பிடித்த புண் கொண்டவனைப் போல இந்த நாடு அவதியுறுக்கொண்டிருக்கும் பிரச்சினை தேசிய இனப்பிரச்சினையே. இனங்களின் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட்டு அனைத்து இன மக்களும் சரிநிகர் சமானம் என்பதை உறுதிப்படுத்தாமல் மேற்சொன்ன நடவடிக்கைகள் "புண்ணுக்கு புனுகு பூசும்" விடயங்களாகும்.

ஜே.வி.பி அதன் கற்பனாவாத சோசலிஷம் சர்வரோக நிவாரணி என்று கூறுகின்ற அதேவேளை அது இனப்பிரச்சினை தீர்வை அங்கீகரிக்கவில்லை. சுயாதீனமான இனங்களின் சமத்துவத்தை அங்கீகரிக்கவில்லை. ஒருவிதமான பௌத்த சிங்கள சோசலிஷம் அதன் கோட்பாடாக இருக்கிறது.

அதைப் போன்றதுதான் இந்த சுயாதீன ஆணைக்குழுக்களையும் சர்வரோக நிவாரணியாக ஐ.தே.க காட்ட முனைகிறது. இது தமிழ் முஸ்லீம் மக்கள் எக்கேடு கெட்டால் என்ன யாரையும் ஏமாற்றி எத்தகைய புலூடாவையும் விட்டு அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான நப்பாசைகளில் இருந்து எழுவதே.

தற்போது ஐ.தே.க அதன் வங்குரோத்து கொள்கைகளின் காரணமாக உதிர்ந்து உலரும் நிலையை அடைந்துள்ளது.

பேரினவாத சக்திகளுக்கு எதிரான நாகரீகமான மக்கள் பிரிவினர் சமூகத்தில் அதிகரித்துச் செல்கையில் சமூகத்தை வழிநடத்த உள்ளார்ந்த ஆற்றல் இல்லாத கபடத்தனமான நேர்மையற்ற அரசியல் சக்திகளுக்கு இத்தகைய நிலை ஏற்படுவது இயல்பே.

50 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டின் சமூகங்களை ஏமாற்றி பிழைப்பு நடத்திய, இனங்களின் அழிவில் குளிர்காய்ந்த கட்சி தனது அந்திம காலத்துக்கு நெருங்கிவிட்டதா? பொறுத்திருந்து பார்ப்போம்.

## சோக்கிரட்டீஸ் பதில்கள்



எஸ். கந்தசாமி – அச்சுவேலி.

**அமுது சஞ்சிகை யாழ் பல்கலைகழக வன்னி மாணவர்களால் எரிக்கப்பட்டுள்ளதே. அமுதுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள் ?**

அமுதே, ஏசுவார்கள், எரிப்பார்கள் உன் கடமையைக் கைவிடாதே என்று யாழ்ப்பாணத்து யோகர் சுவாமி சொன்னதையே உனக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

என். சரவணன் – மட்டக்குளி.

**விநயமான பா.உ ஒருவர் வரவு செலவு திட்டத்தில் எப்படித் துண்டு விழும் என்று சக்தி ரி.வியில் ஒரு கேள்வி கேட்டாரே ?**

அவர் துண்டு விழும் தொகை என்னும் போது தோளில் உள்ள துண்டையோ அல்லது ஏதோ பொருளின் துண்டையோ நினைத்துவிட்டார் போலும்.

ஆர். சாஜகான் – காத்தான்குடி.

**சார்ஜா கிண்ணத்தை இலங்கை கிரிக்கெட் அணி பெற்றுள்ளதே ?**

மிகப் பலம் பொருந்திய பாகிஸ்தான் அணியுடன் மோதி வெற்றி பெற்ற இலங்கை அணிக்கு சபாஷ் போடாமல் விட முடியாது. உலகக் கிண்ணம் இப்போதே இலங்கைக்கு மணக்கத் தொடங்கிவிட்டது. எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போமே.

ஆர். ராஜேஸ்வரி – முகத்துவாரம்.

**தேனிசைத் தேவா அவர்களின் குழுவினரின் இசை நிகழ்ச்சி, வடிவேலு குழுவினரின் நகைச்சுவை நிகழ்ச்சி, கம்பன் விழா என கொழும்பு தமிழ் வட்டாரம் ஒரே களேபரமாக இருக்கிறதே?**

சொந்த ஊரில் சிரிப்பதற்கு உரிமையில்லை, மகிழ்ச்சியாக இருப்பதற்கும் அனுமதியில்லை. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வோம். என கொழும்பிலுள்ள தமிழர்கள் அங்கலாய்ப்பது புரிகிறது. "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா இறைவா" என பாடியவர் பாரதி. மனிதர்கள் பிறந்தது மகிழ்ச்சியாக வாழத்தான்.

என். சந்திரமோகன் – அட்டன்.

**மலையகத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட எழுச்சிகளும், பேச்சுவார்த்தை என்று வரும் போது முஸ்லீம்களின் பிரதிநிதிகளும் இடம் பெறவேண்டும் என்ற கோரிக்கை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எழுப்பப்படுவதும் எதனைப் புலப்படுத்துகிறது ?**

இந்த நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையினராகிய முஸ்லீம், மலையக மக்களுக்கும் தமது தனித்துவங்கள் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதையே காட்டுகிறது.

எம். சண்முகரட்ணம் – திருமலை

**நடந்துக் கொண்டிருக்கும் யுத்தத்தில், காயமடைந்தவர்களின் தொகை சகலதரப்பிலும் அதிகரித்திருப்பது பற்றி நீர் என்ன கூறுகிறீர் ?**

ஊனமுற்றவர்களின் தொகை எமது சமூகத்தில் அதிகரித்து வருவதைப் புலப்படுத்துகிறது.



என். கணேசமூர்த்தி – பூந்தோட்டம், வவுனியா.

**நாளுக்கொரு கொலை, தினம் ஒரு கற்பழிப்பு, கொள்ளை என்ற நிலை எமது நாட்டில் நிலவுகிறதே. வெளியில் சென்ற மனிதன் உயிருடன் வருவானா அல்லது வீட்டில் இருப்பவர்கள்தான் உயிருடன் இருப்பார்களா என்ற நிலை காணப்படுகிறதே ?**

மக்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டதோ இல்லையோ, சிவில் சமூகத்திற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ இல்லையோ, நவீன ஆயுதங்கள் மட்டும் பரவலாக்கப்பட்டுள்ளன. அதனால் பலர் படுகொலை புரியும், கற்பழிக்கும், கொள்ளையடிக்கும், அராஜகம் பண்ணும் உரிமையைப் பெற்றுள்ளனர். போக்கிரிகளின் காட்டில் மழைதான் போங்கள்.

ப. சண்டேஸ்வரன் – மன்னார்.

**ஐ.தே.க வினர் ஏற்படுத்தியுள்ள குடுமிபிடிச் சண்டைப்பற்றி ?**

கொள்கையற்ற கட்சி உள்ளுக்குள் உளுத்துவிட்டது. பலரை சிலகாலம் ஏமாற்றலாம். எல்லாரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது. ஐ.தே.க செய்த பாவங்களுக்கு தண்டனை பெற வேண்டுமோ இல்லையோ.

எம். சுப்பிரமணியம் – யாழ்ப்பாணம்.

**வியாபாரியான அந்த யாழ்ப்பாணத்து பா.உ என்ன செய்கிறார்?**

நாளுக்கும் பொழுதுக்கும் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். இந்தியா விசா கிடைக்கவில்லையா என்னைத்தொடர்பு கொள்ளுங்கள் என்கிறார். மேலதிக விமானச் சேவையொன்று தனது வேண்டுகோளில் நடக்கப் போவதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு செய்தி வேறு கொடுக்கிறார். யாழ்ப்பாணத்துக்கு பாதை திறக்கப் போவதாக அடிக்கடி ரீல் விடுகிறார். ஆனால் ஆகியது ஒன்றையும் காணோம்.



மூச்! 15 லொறி சரக்கு சொந்த யாவாரத்துக்காக யாழ்ப்பாணம் போய் சேர்ந்திருக்கிறது. பலே கில்லாடி. அடுத்த தேர்தலில் யாழ் மக்கள் இவரை பா.உ ஆக்கத் தவறக்கூடாது.

என். மரியநேசம் – பேசாலை, மன்னார்.

**மன்னார் பாலியல் பலாத்காரத்தில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு அமைச்சர் பட்டி வீரக்கோன் பலதடவை உத்தரவு போட்டும் காலம் தாமதித்தே அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் ?**

தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதி. அது ஒருபுறம் இருக்கட்டும் இந்த லட்சணத்தில் காவல் துறையை சுதந்திரமாக விட்டால் என்ன நடக்கும். சுதந்திர பொலிஸ் கமிஷன் பற்றியும், மனித உரிமைகள் பற்றியும் பேசும் ரணில் இந்த மாதிரி விடயங்களை கண்டு கொள்வதில்லையே.



படிப்பகம்

www.padippakam.com



# சனத்தா கொக்கா ?

சார்ஜா போட்டியில் இலங்கை அணி பெற்ற வெற்றி கிரிக்கெட் உலக அரங்கில் இலங்கையைத் தூக்கி நிறுத்தியுள்ளது. பாகிஸ்தான் அணி தனது தாய்நாட்டில் விளையாடுவதைக் காட்டிலும் மிகவும் திறமையாக விளையாடும் களம்தான் சார்ஜா. உலகின் ஏனைய கிரிக்கெட் அணிகள் பாகிஸ்தான் அணியை பாகிஸ்தானில் வெல்வதைவிட சார்ஜாவில் வெல்வதற்கு திணறியுள்ளன.

சார்ஜா மத்திய கிழக்கிலுள்ள முஸ்லீம் நாடுகளில் எண்ணெய் வளம் கொழிக்கும் செல்வச் செழிப்பான நாடு. பாகிஸ்தான் சார்ஜாவில் நடைபெற்ற 80 வீதத்திற்கும் மேலான கிரிக்கெட் போட்டிகளில் பங்கு கொண்டுள்ளது. இத்தகைய சூழலில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை சார்ஜாவில் வென்றது மெச்சத்தக்கது.

இலங்கை அணி தான் விளையாடிய "லீக் ரவுண்ட்" முதல் நான்கு ஆட்டங்களில் மூன்றில் தோல்வியடைந்தது. நியூசிலாந்து அணியுடன் சமமாக ஒரேயொரு போட்டியில் வென்றிருந்தாலும் இலங்கை அணியின் ஓட்ட வேக அடிப்படையில் பெரு வெற்றிகளைப் பெற்றிருந்த பாகிஸ்தானை இறுதிப் போட்டியில் சந்திக்கத் தேர்வானது.

இறுதிப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணியின் தலைவர் சனத் ஜயசூரியா முதலில் துடுப்பெடுத்தாட தேர்வு செய்தார். இதற்கு இரண்டு முக்கிய அடிப்படைக் காரணங்கள் இருந்தன. முதலாவதாகத் துடுப்பெடுத்து ஆடும் பொழுது ஒவ்வொரு பத்து ஓவர்களிலும் எந்தளவு ஓட்டங்களைப் பெற வேண்டும் எனத் துடுப்பாட்ட வீரர்கள் எத்தகைய நிர்ப்பந்தங்களும் இல்லாது தீர்மானிக்க முடிகிறது. இரண்டாவதாகப் பந்து வீசும்பொழுது ஓட்ட எண்ணிக்கையை சுலபமாக கட்டுப்படுத்தவும் பந்துவீச்சாளர்களை திறமைக்கு ஏற்ப சுழற்சி முறையில் மாற்றவும், பந்து தடுக்கும் முறையில் புதிய முறைகளையும் புகுத்தி பிரச்சினைகளை ஏற்படுத்தவும் முடிகின்றது.

1996ம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரரான சனத் முதல் 15 ஓவர்களில் தடுப்பாட்ட வீரர்களில் 9 பேர் ஒரு குறிப்பிட்ட தூரவலயத்தினுள் நிற்க வேண்டிய கட்டாயத்தில் மிகவும் வேகமாக ஓட்டங்களைக் குவித்து உலக கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்தினார். இத்தகைய யுக்தியையே ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டிய ஓர் கட்டாயத்திற்கு புதிய வழி முறையை ஏற்படுத்தினார்.

ஆனால் தற்போது அதே சனத் முதல் 15 ஓவர்களிலும் நிதானமாக விக்கெட்டுக்களை இழக்காமல் ஆடி பின்னர் வரும் ஓவர்களில் திறமைமிக்க (ஸ்பெசலிஸ்ட்) பந்துவீச்சாளர்கள் பந்து வீசாத நிலையில் மிக வேகமாக ஓட்டங்களைப் பெறும் நவீன யுக்தியைக் கையாண்டு திறமையாக ஆடுகின்றார்.

இலங்கை அணி சனத்தின் இப்புதிய முயற்சியில் வெற்றி கண்டு முதலாவதாகத் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 297 ஓட்டங்களை பெற்றது. சனத்- 71, மஹேல- 67, அத்தபத்து- 83 எனத் திறமையாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

பாகிஸ்தான் தரப்பில்



தடுப்பாட்ட முறை தரக்குறைவாக இருந்தமை குறிப்பாக கைக்கு எட்டியும் வாய்ப்புக் கிட்டாத 5 காட்ச்சுகளை கோட்டை விட்டது இலங்கை அணிக்கு சன்மானமாக அமைந்துவிட்டது. பந்து வீச்சில் இலங்கை அணி வீரர்கள்- வேகப்பந்து வீச்சாளர்கள் திறமையாக வீசியதும் தடுப்பாட்ட வீரர்களின் துணிச்சல்கரமான காட்ச்சுக்களும் அதுவும் குறிப்பாக முரளியின் திறமை பாராட்டப்பட வேண்டிய அம்சங்களாகும்.

. இலங்கை அணி இதே முறையில் திறமையாக முன்னேறும் பட்சத்தில் 2003ம் ஆண்டு உலகக் கோப்பையை மீண்டும் கைப்பற்றுவது சிரமில்லாத காரியமாகும். சனத், சங்கக்கார, மஹேல, ஆர்னல்ட், அத்தபத்து, ஆகிய துடுப்பாட்ட வீரர்களும் வாஸ், முரளி, தில்லாரா, சொய்சா, போன்ற பந்து வீச்சாளர்களும் நிச்சயம் திறமையாக ஆடி இலங்கை அணியை முதல்தர நிலைக்கு கொண்டுவர முடியும்.

மேற்கு இந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளரான கோர்ட்னி வோல்ஷ் தனது 18 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். 131 டெஸ்ட் போட்டிகள் விளையாடி 519 விக்கெட்டுக்களை வீழ்த்தி உலகச் சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இச் சாதனையை முறியடிப்பது மிகவும் சிரமமானது. நவீன உலகில் பந்து வீச்சாளர்கள் உடலில் உபாதைகள் ஏற்படாது தொடர்ந்து 18 ஆண்டுகள் விளையாடுவதும் அதிலும் 500 விக்கெட்டுக்களை வீழ்த்துவதும் ஆனையிறவுப் பாதையைத் திறப்பதைக் காட்டிலும் கடினமானது.

கிரிக்கெட் உலகில் துடுப்பாட்ட வீரர்களில் தலைசிறந்த வீரரான சச்சின் அதிகளவிலான ஓட்டங்களைப் பெறக் கூடிய நிலையில் இருக்கின்றார். இந்தியாவைச் சேர்ந்த சுனில் கவாஸ்காரின் 10,332 ஓட்டங்களை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அலன்போர்டர் தாண்டி 11,221 ஓட்டங்களைப் பெற்று சாதனையை நிலைநாட்டினார். ஆனால் 28 வயதே நிரம்பிய சச்சின் இதையும் தாண்டி 12,000 ஓட்டங்களைப் பெறுவார் என்பது நிச்சயம்.

எனவே கிரிக்கெட் உலகில் சிறந்த துடுப்பாட்ட வீரரையும் பந்து வீச்சாளரையும் இனங்காணமுடிந்த எமக்கு கிரிக்கெட் உலகின் மிகச் சிறந்த ஆல் ரவுண்டர் யார் என்பதை அறிவதில் ஆர்வம் இருக்கலாம். இன்றைய காலகட்டத்தில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஜக் காலிஸ் குளுசுனர், பொலக் போன்ற வீரர்களும், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மைக்கல் பெவன், ஸ்டீவ் வோ, பாகிஸ்தான் அணியில் வாசிம் அக்ரம், ஆகியோரே குறிப்பிட்டு சொல்லக் கூடியவர்கள். ஆயினும் ஆல் ரவுண்டர் விடயத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் சேர் கார்ஃபில்ட் சோபோர்ஸ் மிகவும் உச்சாணிக் கொம்பில் இருக்கின்றார்.

82 டெஸ்ட் போட்டிகள் விளையாடிய சோபேர்ஸ் 8032 ஓட்டங்களையும், 235 விக்கெட்டுக்களையும் 110 காட்ச்சுக்களையும் பிடித்துள்ளார். துடுப்பாட்டத்தில் இவர் அடித்த 365 ஓட்டங்கள் 3 தாசப்தங்களாக முறியடிக்கப்படாது இருந்தது. இடது கை பந்து வீச்சாளரான சோபார்ஸ் வேகமாகவும், மித வேகமாகவும், சுழற்சிப் பந்து வீச்சிலும் திறமையானவர்.

தற்போது 64 வயதில் மேற்கிந்திய தீவுகளில் இளைப்பாறி வரும் சோர்பேஸின் ஆல் ரவுண்ட் சாதனையை அதாவது - 8000 க்கு மேல் ஓட்டங்கள் - 200 க்கு மேல் விக்கெட்டுக்கள்- 100க்கு மேல் காட்ச்சுகள் என்பதை எட்டிப்பிடிக்க யாரால் முடியும் எனத் தெரியவில்லை. சேர் கார்ஃபில்ட் சோபோர்ஸ் இன்றுவரை கிரிக்கெட் உலகில் முடிசூடா மன்னனாகத் திகழ்கின்றார்.

**தயாளன்**

# எத்தனை காலம்தான் இந்த நோய் நீடிக்கும்?



புலிகள் தாம் நத்தார் தினத்திற்கு முன்தினம் பிரகடனப்படுத்திய யுத்த நிறுத்தத்தை தாமாகவே முடிவுக்கு கொண்டு வந்து விட்டனர். யுத்தம் மீண்டும் உக்கிரம் பெற்றுள்ளது. மீண்டும் மரண பீதி எங்கும் பரவிவிட்டது.

இத்தனை பேர் மரணம் இத்தனை பேர் காயம் என்ற செய்திகளும் அம்புலன்ஸ் வண்டிகளின் ஓட்டமும் அதிகரித்துள்ளன. எப்போதாவது அத்தி பூத்தாற்போல் யுத்த நிறுத்தம் ஒரு சில நாட்களுக்கு மேற் கொள்ளப்படுவதும் பின்னர் உக்கிர வெறியுடன் யுத்தம் ஒரு சடங்காக நடைபெறுவதும் எமது நாட்டைப் பொறுத்தவரை சர்வசாதாரணமாகிவிட்டது.

யாழ்ப்பாணத்தின் வலிகாமத்தில் விதைக்கப்பட்ட கண்ணி வெடிகளில் கால் இழப்பு கை இழப்பு அன்றாட நிகழ்வு. தற்போது தென்மராட்சி முழுவதும் கண்ணி வெடிகள் விதைக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்ணி வெடிகள் அகற்றப்படுவதற்கு பல தசாப்தங்கள் பிடிக்கலாம்.

வடக்கு கிழக்கு பூராவுமே இந்த கண்ணி வெடிகள் பாரிய சூழலியல் சீர் கேட்டை உருவாக்கியுள்ளது.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுதந்திர ஈழத்தையா அல்லது ஒரு ஆப்கானிஸ்தானையா உருவாக்கப் போகிறார்கள் என்ற நியாயமான கேள்வி எழவே செய்கிறது.

இதனைப் புதைப்பவர்கள் இங்கு ஒரு மக்கள் சமூகம் வாழ்கிறது என்று சிறிதும் சிந்திப்பதில்லை. தமது புஜங்களை தட்டிக் கொள்வதற்கு யுத்த வெற்றிகளில் திளைப்பதற்கு மக்கள் வாழ்விடங்களை நரகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வீடற்ற, தொழிலற்ற, கல்வியற்ற இயற்கைச் சூழல் அழிந்த ஒரு வனாந்தரத்தை இவர்கள் மக்களுக்கு பரிசாக வழங்கியுள்ளார்கள்.

நியாயமான தீர்வையும், சமாதானத்தையும் இயல்பு வாழ்க்கையையும் அங்கலாய்ப்புடன் எதிர்பார்க்கும் மக்களுக்கு இவர்கள் முட்படுக்கைகளை ஓயாது வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சமூகத்திற்கோ அல்லது தனி மனிதனுக்கோ இந்த உலகம் தொடர்பாக, தனது வாழ்க்கை தொடர்பாக உள்ள நியாய பூர்வமான எதிர்பார்ப்புக்களை இவர்கள் மறுத்துள்ளார்கள். வாழும் காலத்தையும் குறுக்கி மக்களை மனநோயாளர்களாக்கி அவர்களின் ஆக்கச் செயற்பாடுகளை ஸ்தம்பிதமடையச் செய்துள்ளார்கள்.

இந்த 20 வருட யுத்தம் மனித ஆற்றலை மிகப் பாரதூரமாகப் பாழ்படுத்தியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நியாயபூர்மான முயற்சிகள் அனைத்தும் சீர்குலைக்கப்பட்டன. அதற்காக இதயச் சுத்தியுடன் உழைத்தவர்கள் துரோகி பட்டத்துடன் மரணிக்க வேண்டியேற்பட்டது. இல்லையேல் ஒதுங்கிச் செல்ல வேண்டியேற்பட்டது.

இந்தக் கொடுமை உள்நாட்டு ஜனநாயக அரசியல்வாதிகள், மனித உரிமைவாதிகள், மாற்றுக் கருத்துக் கொண்டோருக்கு மாத்திரம் ஏற்படவில்லை. சர்வதேச ரீதியில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை செலுத்திய தலைவர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் கசப்பான அனுபவங்களே கிட்டின.

ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவர் பத்மநாபா அவர்களுக்கும், த.வி.கூ யின் செயலதிபர் அப்பாபிள்ளளை அமிர்தலிங்கம் அவர்களுக்கும், மனித உரிமைவாதியும் மருத்துவக்கல்லூரி விரிவுரையாளரான ரஜனி திரணகம அவர்களுக்கும் ஏன் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் குரூரமான அனுபவங்களே கிட்டின.

இந்த அவக்கேடான வரலாற்றைப் பார்த்து பலர் இன்னமும் எதுவும் நடக்காதது போல் பேசிக்கொண்டிருப்பதுதான் ஆச்சரியமானது.

ஒன்றில் பயம் அல்லது தற்காலிக வெற்றியாளர்களுக்கு அடிபணியும் பெருமிதத்தைத் தவிர இங்கு வேறெந்தக் காரணமும் இருக்க முடியாது.

எமது சமூகத்தில் வாழ்பவர்கள் புறநிலையை யதார்த்தத்திற்கேற்ப தமது மனசாட்சியின்படி உண்மையைப் பேசாதவரை இங்கு பொய்களே கோலோச்சும்.

நீதிக்காகக் குரல் கொடுப்பவன் கொடூரமான தனிமையை அனுபவிப்பான். எமது இனத்தின் அபிலாஷைகள் மாத்திரமல்ல, மானிடத் தன்மை கொண்ட நாகரீக சமுதாயமும் எமக்கு தேவைப்படுகிறது. இல்லையேல் சுதந்திரமென்பது பெற்றெடுக்கப்படுமானால் அது ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் சுதந்திரத்தை ஒத்ததாக அது இருக்கும். மக்களுக்கான சுதந்திரமாக அது இருக்காது.

**திருமலை - தீபக்**

படிப்பகம்

www.padippakam.com



## கொசோவோ

# இந்த நூற்றாண்டிலும் தொடரும் துயரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**மசிடோனியாவிற்கும் அல்பேனியக் கெரிலாக்களுக்குமிடையே மோதல்கள் முரண்பாடுகள் வெடித்துள்ள இன்றைய நிலையில் கொசோவாவின் துயர்பற்றி ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் உயிர் நிழல் சஞ்சிகையில் உமாகாந்தன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று இங்கு மறுபிரசுரமாகிறது.**

யூகோஸ்லாவியா மீது சர்வதேச நிர்ப்பந்தம் செலுத்தப்பட்டது. பாரீஸின் புறநகரான ரம்புய்யே நகரில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் 1999 பெப்ரவரி 23ம் திகதி இடைநிறுத்தப்பட்டன. ஆனால் இப்பேச்சுவார்தைகள் மார்ச் 14ம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் KLA பின்வாங்க அப்பாவி அல்பேனிய இன மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்தது. இந்நிலையிலே யூகோஸ்லாவியா மீது தாக்குதல்களை ஆரம்பிக்கப்போவதாக நேட்டோ அறிவித்தது. இந்தக் கட்டத்தில் கொசோவோவில் வாழ்ந்த ஒரு லட்சத்து எழுபதினாயிரம் அல்பேனிய இன மக்கள் தமது மண்ணைவிட்டு வெளியேறிவிட்டார்கள்.

இந்த நிலையில் நேட்டோ படைகள் யூகோஸ்லாவியா மீதான தமது வான் தாக்குதல்களை மார்ச் 24ம் திகதி ஆரம்பித்தன. ஆத்திரம் கொண்ட சேர்ப்படைகள் கொசோவோவிலுள்ள அல்பேனிய இன மக்களை மண்ணைவிட்டு விரட்ட ஆரம்பித்தனர். ஆண்களைத் தனியாகத் பிரித்தனர். பலரை படுகொலை செய்தனர். இளம் பெண்களைக் கூட்டமாக பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தினார்கள். முதியவர்களையும் குழந்தைகளையும் பெண்களையும் வெளியேற்றத் தொடங்கினார்கள். அவர்களது அடையாள அட்டைகள், பாஸ்போர்ட்டுகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், வீட்டு உடைமைப் பத்திரங்கள், ஏன் வாகன இலக்கத்தகடுகள்கூட பறிக்கப்பட்டன. இந்த அல்பேனிய இன மக்கள் கொசோவோவில் வாழ்ந்ததற்கான ஒவ்வொரு சிறு தடயமும் சேர்ப்படைகளால் பறிக்கப்பட்டது. அழிக்கப்பட்டது.

இரண்டாவது உலகப் போரின் பின் ஐரோப்பாவில் நடைபெற்ற மிகப் பெரிய மக்கள் வெளியேற்றம் இதுவாகும். உதாரணமாக கொசோவோவின் பெஜ் என்னும் நகரில் ஒரு இலட்சம் அல்பேனிய இன மக்கள் வாழ்ந்தனர். ஐந்து நாட்களில் இவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

கறுப்பு சீருடையில் அதிரடிப்படையினர், விஷேட பொலிஸ் படையினர் நீலச் சீருடையில், இராணுவத்தினர் பச்சை சீருடையில், கூலிப்படையினர் சிவப்பு மற்றும் வெள்ளை உடைகளில் கொசோவோவில் வீடு வீடாகச் சென்று கதவுகளை உடைத்து "கொசோவோ எங்களுடையது. உங்களுக்குத் தேவை நேட்டோதானே! போங்கள் போய் நேட்டோவுடன் சேருங்கள்" என்று அடித்து அல்பேனிய இன மக்களை விரட்டினார்கள். "நீங்கள் இங்கே திரும்பி வரக்கூடாது. நீங்கள் எங்களுக்குத் தேவையில்லை" என்றே கூறினார்கள்.

80 ஆயிரம் மக்கள் வசித்த பிறிஸ்யேர்னிலும் கொசோவோவின் தலைநகரான பிறிஸ்ரினாவில் வாழ்ந்த 2 லட்சத்து 60 ஆயிரம் மக்களில் 2 லட்சம் அல்பேனிய இன மக்களும் சேர்ப்படைகளால் தமது மண்ணைவிட்டு விரட்டப்பட்டனர்.

நேட்டோவின் வான் தாக்குதல்கள் மக்கள் விரட்டப்படுவதையும் மக்களின் வெளியேற்றத்தையும் அதிகரித்தது. ஏனெனில் நேட்டோவின் தாக்குதல்கள் கொசோவோவின் அல்பேனிய மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதை உண்மையான நோக்காகக் கொள்ளவில்லை.

யூகோஸ்லாவியாவின் இராணுவபலத்தை அழிப்பதே நேட்டோவின் நோக்கமாக இருந்தது.மேற்கு ஐரோப்பாவினுள் சோவியத் யூனியனின் தலையிடு வருவதைத் தடுத்து பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு அமைப்புதான் நேட்டோ. அத்தகைய அமைப்பு தனது அமைப்பினுள் உள்ள நாடுகளுக்கு எந்த ஆபத்தையும் விளைவிக்காத, சுய இறைமை உள்ள நாடான யூகோஸ்லாவியாமீது ஐக்கிய நாடுகள் சபையின் சரியான அங்கீகாரம் கூட இல்லாமல் போர் தொடுத்திருக்கின்றது. ஒரு உள்நாட்டு யுத்தத்தில், பிரிவினைக்கான யுத்தத்தில் தலையிட்டிருக்கிறது.

நேட்டோவின் தாக்குதல்கள் அதிகரிக்க அதிகரிக்க கொசோவோ அல்பேனிய இன மக்களுக்கெதிரான ஒடுக்கு முறைகளும் அதிகரித்தே வருகின்றன. அது போலவே சேர்ப்படைகள் கொசோவோவிலுள்ள அல்பேனிய மக்களுக்கு இழைக்கும் கொடுமைகளுக்கு ஈடாக நேட்டோ படைகள் வான் தாக்குதல்கள் மூலம் அப்பாவி யூகோஸ்லாவிய மக்களுக்கு இழைத்து வருகின்றன.

நேட்டோ படைகள் கொசோவோ மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்து இரண்டு மாதங்களாகிவிட்டன. இந்த இரண்டு மாதக் காலக்கட்டத்தில் ஆரம்பத்தில் தினந்தோறும் 350 நேட்டோ விமானங்கள் யூகோஸ்லாவியா மீதான வான் தாக்குதல்களை நடத்தின. இன்றோ தினந்தோறும் 1000 நேட்டோ விமானங்கள் 24 மணி நேரமும் வான் தாக்குதல்களை நடத்துகின்றன. இரண்டு மாதங்களை அண்மித்தபோது நேட்டோ விமானங்கள் 24 ஆயிரம் தடவை தாக்குதல் நடத்தி வெளியேறின.

யூகோஸ்லாவியா மீது 14 ஆயிரம் குண்டுகளைப் பொழிந்தன. ஒரு குண்டின் குறைந்தபட்ச நிறை 500 இறாத்தல். இந்தத் தாக்குதல்களின் போது பாலங்கள், வைத்தியசாலைகள், வயோதிபர் விடுதிகள், ரயில்கள், மக்கள் குடியிருப்புக்கள் ஏன் கொசோவோவின் அல்பேனிய இன அகதிகள் மீதும் கூட குண்டு வீச்சு நடத்தியுள்ளன.

1200க்கு மேற்பட்ட யூகோஸ்லாவிய மக்கள், இதில் மூன்றிலொரு பகுதி குழந்தைகள், நேட்டோவின் வான் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர். பெல்கிரேட்டிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் நேட்டோவின் குண்டு வீச்சிலிருந்து தப்பவில்லை.

அப்படியாயின் கொசோவோவின் அல்பேனிய அகதிகளின் பிரச்சினை தீர இந்த நேட்டோவின் தாக்குதல்கள் என்ன உதவி செய்தது?. கொசோவோ அகதிகள் தமது மண்ணுக்கு திரும்ப வழி ஏற்படாதா? அல்லது சேர்ப் அரசினை தமது நிபந்தனைகளுக்கு சம்மதிக்க வைக்க முடிந்ததா? என்றால் இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும்.

கொசோவோவிலிருந்து அல்பேனிய இன மக்கள் அகதிகளாக்கப்பட்டு வெளியேற்றப்படுவதற்கு எதிராக நேட்டோ யுத்தத்தை ஆரம்பித்த நாளிலிருந்து கடந்த மே மாதம் 27ம் திகதி வரை கொசோவோவிலிருந்து 9இலட்சத்து 71 ஆயிரம் அல்பேனிய இன மக்கள் வெளியேறியுள்ளனர்.

**UNHCR** எனப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையகத்தின் அறிக்கையின்படி இந்த அகதிகளில் 4 இலட்சத்து 41 ஆயிரத்து 600 பேர் அல்பேனியாவிலும் 2 இலட்சத்து 51 ஆயிரம் பேர் மசிடோனியா, பொஸ்னியா, மொன்ரிநிகரோவிலும் அகதிகளாயுள்ளனர்.

இது தவிர 68ஆயிரம் கொசோவோ அல்பேனியர்கள் உலகின் வெவ்வேறு மூலைகளில் உள்ள நாடுகளுக்கு அகதிகளாக தமது சொந்த மண்ணைவிட்டு அனுப்பப்பட்டுள்ளனர். அப்படியாயின் கொசோவோவின் அல்பேனிய இன மக்களை மேலும் மேலும் அகதிகளாக்குவதற்கா நேட்டோ இந்த யுத்தத்தை யூகோஸ்லாவியா மீது தொடர்ந்தது?.

இந்த யுத்தத்தில் நேட்டோவினால் சேர்ப்படையினர் கொசோவோவின் அல்பேனிய இனப் பெண்களை பாலியல் வன்முறைக்கு ஆளாக்குவதைத் தடுத்த நிறுத்த முடிந்ததா? ஆண்களைக் கொல்வதைத் தடுக்க முடிந்ததா? அவர்களது தேசிய அடையாளங்களைப் பறிப்பதைத் தடுக்க முடிந்ததா? மாறாக ஸ்லோபொடன் மிலோசவிச் விரும்பியபடி கொசோவோவின் அல்பேனிய இன மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கத்தானே முடிந்தது.

நன்றி:- உயிர்நிழல்

(அடுத்த இதழில் தொடரும்)

# தமிழ் ஆசிரியர் சங்க எழுச்சி மாநாடு ஒரு விமர்சனக் கடிதம்

இலங்கை தமிழ் பேசும் மாணவர்களின் கல்வியை பல இன்னல்களின் மத்தியிலும் முன்னெடுத்துச் செல்லும் ஆசிரியர் குழாமின் நலனில் அக்கறை செலுத்தி "ஒற்றுமையே பலம்" என்னும் சுலோகம் தாங்கி செயற்பட்டுவரும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி மாநாடு யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெற்றும் நடைபெறவும் இருக்கின்றது.

இந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆசிரியர்களின் தற்காலிக, நிரந்தர பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆராய்கின்ற அதேவேளை ஆசிரியர்கள் மாணவர்கள் எதிர் நோக்கும் சில பல பிரச்சினைகளில் நழுவல் போக்கையும் அம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் வெளிப்படையாகத் தெரிகின்றது. அப்படியானவற்றில் ஒரு சிலவற்றை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி புதிதாக தயாரிக்கப்படும் பாடப்புத்தகங்களில் தமிழ் மொழிபெயர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டதுடன் அதற்கு காரணமாக பாடநூல் குழுவில் முஸ்லீம் சகோதர ஆசிரியர்களும், கொழும்பு வாழ் தமிழ் ஆசிரியர்களும் சரியான தமிழ்மொழி வழக்குப் புரியாது தமது மொழி வழக்கில் மொழி பெயர்த்து உள்ளனர் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

உயர் கல்வியமைச்சு வரை சென்று ஆசிரியர்களின் சம்பளம், இடர் கால கொடுப்பனவு மற்றும் இதர பிரச்சினைகளைப்பற்றி வாக்குவாதப்பட்டு தமிழ் புலமை பெற்ற ஆசிரியர்கள், பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர்களை உள்ளடக்கிய பாடநூல் குழுவை அமைக்க வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தமுடியாது போனதற்கான காரணம்தான் என்ன? இன்று ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் கரங்களிலும் உள்ள பாடநூல்களில் எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள், வரலாற்றுத் திரிபுகள் உள்ளன என்பது எவ்வளவு மனவருத்தத்துக்குரிய ஒரு விடயம். இதை ஒரு சாதாரண விடயமாக கொண்டு வெறும் விமர்சனத்தோடு நிறுத்தும் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் பொறுப்புணர்வை என்னவென்று சொல்வது?

ஒரு இனத்தின் இளம் சிறார்களின் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது பாடசாலை முறை சார்ந்த கல்வியாகும். இப்பாடசாலை கற்றல், கற்பித்தல் நிகழ்வை வழிப்படுத்த உறுதுணையாக அமைவது பாடநூல்கள் ஆகும். அப்பாட நூல்களில் உள்ள பிழையான எத்தனை விடயங்கள் பிஞ்சு உள்ளங்களில் பதியப் போகிறது. அதுவே காலகதியில் சரியானது எனும் நிலைக்கு இட்டுச் செல்லப்போகிறது.

இவ்வாறான தவறுகள் ஏற்படுவதற்கும் அதுவே தொடர்கதையாக தொடர்வதற்கும் தமிழ் புத்தி ஜீவிகள் அனைவரும் காரணமான போதும் கல்விச் செயற்பாடுகளை தமது முழு நேரமாக கொண்டுள்ள ஆசிரியர்களும் அவர்களது நலன்களைப்பேணும் தொழிற்சங்கங்களும் இது தொடர்பாக அசிரத்தையுடன் செயற்படுவது மன்னிக்க முடியாத தவறாகும்.

மூன்றாம் தரப்பார் போர் விமர்சனத்துடன் இதை நிறுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும். அதற்குரிய தீர்வுகளை ஆசிரியர்களும், ஆசிரியர் தொழிற்சங்கங்களும் காணமுடியாது போனால் வேறுயார் இதுவிடயம் தொடர்பாக சிந்திக்கப் போகிறார்கள்?

மேலும் இவர்களின் அரசியல் தொடர்பான கருத்தை நோக்குவோமானால் புலிகளின் பங்களிப்பின்றி சமாதானம் ஏற்பட முடியாது என சர்வதேச அரங்குகளில் எடுத்துரைப்போம் எனக் கூறும் இவர்களால் புலிகளால் இங்கு புரியப்பட்ட ஜனநாயக விரோத செயற்பாடுகளைப்பற்றி எடுத்துக் கூறத்தான் முடியுமா? தற்காலத்தால் வன்னிப் பாடசாலைகளில் சிறுவர்களை ஆயுததாரிகளாக்கும் செயல்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியுமா?

இன்று பிரித்தானிய அரசு புலிகளை பயங்கரவாத அமைப்பாக கருதி தடைசெய்துள்ளதற்கு காரணம் புலிகளால் பிரித்தானிய பிரஜைகள் பாதிக்கப்பட்டார்கள் என்ற அர்த்தத்தில் அல்ல. தாம்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற தலைமைப் போட்டியின் விளைவாக மற்றைய தீவிரவாத மிதவாத தமிழ் தலைவர்களை கொன்றதுடன் தமது தலைமைக்கு சவாலான கருத்துக்களை வெளியிடும் அயல்நாட்டுத் தலைவர்களையும் கொன்றொழித்த வன்முறைச் செயற்பாடு காரணமாக பிரிட்டன் புலிகளை தடை செய்தது. ஆனால் சமாதானம் மனித உரிமை மீறல்கள், தமிழ் கட்சிகளின் உரிமைப் போராட்டம் என்னும் கருத்துக்களை முன் வைக்கும் தமிழர் ஆசிரியர் சங்கம் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எப்போதாவது கண்டனம் வெளியிட்டதாக தகவல்கள் கிடையாது.

தமிழ் இனத்தின் துரதிஷ்டம் பக்கச் சார்புள்ளவர்களும், இதய சுத்தி இல்லாதவர்களும் மனித நேயமற்றவர்களுமே எந்தவோர் அமைப்புக்கும் தலைமை தாங்கும் தகுதி உள்ளவர்களாக இருக்கின்றார்கள். பக்கச்சார்பற்றவர்களும் இதேயளவு சுத்தியுடன் செயற்படும் அறிவாற்றல் உள்ளவர்களும் சமத்துவ சிந்தனையுள்ள மானுட நேயம் உள்ளவர்களும் தற்போதைய நிலையில் பின் தள்ளப்பட்டுள்ளதுடன் அவர்களின் வாழ்க்கை இருப்புக்கு கூட சவால் விடப்படுகின்றன.

யாழ்- யாழினி

படிப்பகம்

www.padippakam.com
Regd. in the Dep. of Posts of Sri Lanka under (No: QD / 41 / News / 2001)




# கை கொடுப்பது எப்போது

இலங்கை - இந்திய ஜனாதிபதிகள் உள்ளம் திறந்து கை கொடுத்துக் கொள்கிறார்கள். தீரா இன நோய்க்கு உள்ளாகி இருக்கும் இலங்கையை மீள்விக்க இந்தியா மீண்டும் கை கொடுப்பது எப்போது?



# விண்வெளியின் முதல் உல்லாசப் பிரயாணி

அறிவு ஆற்றல், வீரம் இருந்தால் மட்டும் ஒரு மனிதன் உலகப் புகழ் பெற்றுவிடலாம் என்றில்லை. இந்த மனிதனைப் பாருங்கள் டேனிஸ் டிட்டோ 20 இலட்சம் டொலர் செலவழித்து ரஷ்ய ராக்கெட்டில் விண்வெளிக்குச் சென்றார். முதன் முதல் விண்வெளிக்குச் சென்றவர் ஜுரி ககாரின்; முதல் சந்திரனில் கால் வைத்த மனிதன் நீல் ஆம்ஸ்ரோங்; முதலாவது விண்வெளி உல்லாசப் பிரயாணி இந்த கோடீஸ்வரர் எப்படி இருக்கிறது இந்தக் கதை.




# ஜி.எஸ்.எல்.வி [GSLV]

இந்த ராக்கெட் இந்தியாவிற்கு ஒரு புதிய கம்பீரத்தை கொடுக்கிறது. 400 தொன் எடையுள்ள இந்த ராட்சத ராக்கெட் பூமியிலிருந்து 36,000 கி.மீற்றர் தூரத்திலுள்ள வட்டப்பாதையில் 1.53 தொன் செய்மதியை செலுத்தியுள்ளது. உலக அரங்கில் இந்தியாவின் அந்தஸ்த்தை உயர்த்தியுள்ள இந்த ராக்கெட் பாதுகாப்புச் சபையில் இந்தியா இடம் பெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் இதுவொரு பிரமாண்டமான பாய்ச்சலாக அமைகிறது.



# இவர்கள் பெற்ற கீர்த்தி



ஆறு தசாப்தங்களாக இசை உலகின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர்.17 வயதில் பாடத் தொடங்கிய அந்தக் குயிலுக்கு இப்போது வயது 71. பாடியது 30,000 பாடல்களுக்கு மேல். லதா மங்கேஸ்கார் அவர்கள் இந்தியாவின் அதி உயர் விருதுகளான பத்மபூஷண், தாதாசாஹிப் பால்கே விருதையும் பெற்றுள்ளார்.



செனாய் சக்கரவர்த்தி ஷெனாய் வாத்திய கருவி பாவித்தகர் பிஸ்மில்லாகானுக்கு இந்திய அரசாங்கம் பாரத ரத்னா விருது வழங்கி கௌரவித்துள்ளது. 84 வயதான கான் அவர்கள் முதன் முதலாக 1930 இல் தனது செனாய் வாத்திய வித்தையை அறிமுகப்படுத்தினார். அந்த வித்தையில் அவரை மிஞ்ச இன்னொருவர் இல்லை.

# சாதனை

கலையார்வன் இராசபு[illegible]கள் கணிப்பொறி 2000 என்[illegible] தமிழில் வடித்துள்ளார்.

இன்றைய யாழ்ப்பாணச் [illegible] இந்த நூல் ஒரு சாதனையே. 7 கோடி தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டில் இருந்து ஒரு சில நூல்களே தமிழில் வெளிவந்துள்ளன.

கொழும்பிலிருந்தும் சில பாராட்டப்பட வேண்டிய நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் போர் சூழலின் உள்ளிருந்து இந்த நூல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இந் நூல் வெளியீட்டுரையில் வணபிதா ஜெயசீலன் ஆற்றிய உரையிலிருந்து சில கருத்துக்கள் மனங்கொள்ளத்தக்கவை. "தகவல் தொழில் நுட்ப சொல் நெறி பெருந்தெரு" வானவெளியில் கட்டப்படும் கற்பனையாக தமிழருக்கு அமையப் போவதில்லை.

மாறாக தமிழரின் மனவெளிகளுடாக இப்பாதை போக இணையத் தமிழ் எம்மை தயார்படுத்துகிறது. "கங்கையை வென்றான் கடாரம் வென்றான" என்று நெட்டுரு போட்டு பழம் பெருமையின் அதீத கற்பனா வாதத்தில் தமிழ் மக்களை குறுக்காமல் அறிவியல் துறைக்கு நாம் செல்ல வேண்டும்.

அறிவியல் துறையை ஆங்கிலமயப்படுத்திய கருத்தியலால் தமிழரை அறிவியல் துறையில் அந்நியமாக்கி ஆக்கபூர்வ வளர்ச்சியை தேக்கமாக்கிய கடந்தகால வரலாற்றுப் பிழையை விடுத்து புதிய வளர்ச்சிக்கும் எதிர்பார்ப்புக்கும் தமிழரின் இணைந்த முயற்சி சிறப்பானது.

# குத்துச் சண்டை ஜாம்பாவான்களின் புதல்விகள் மோதல்

உலக குத்துச் சண்டை வீரர் முகமது அலி (கலியஸ் கிளே) சென்ற நூற்றாண்டின் மிகச் சிறந்த வீரர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராவார். 1960, 1970 களில் உலக அதிபார குத்துச் சண்டையின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த முகமது அலியின் புதல்வியே 23 வயது நிரம்பிய லைலா அலி. 1999 இல் தனது பிரவேசத்தை ஆரம்பித்த லைலா அலி இதுவரை 4 போட்டிகளில் எதிராளிகளை ஜயமாய்த்து விட்டார். இவரது அடுத்த போட்டியாளர் ஜக்கிலைட் ஃபிரேசியர் இவருக்கு சளைத்தவரல்ல. ஜக்கியின் தந்தை ஜோ ஃபிரேசியர் முகமது அலியுடன் 3 தடவைகள் மோதி ஒரு முறை வெற்றியும் பெற்றார். தந்தைமாரின் காலம் முடிந்து அவர்களின் புதல்விகள் லைலாவும் ஜக்கியும் எதிர்வரும் ஜூன் மாதம் 8ம் திகதி அமெரிக்காவிலுள்ள ஒனிடா மாகாணத்தில் மோதவுள்ளார்கள். புலிகள் மோதியதைக் கண்ட மக்கள் புலிகளின் பெண் குட்டிகள் மோதுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.





# தீட்டிய இடத்திலேயே கூர் பார்த்தல் இதுதானோ

வங்கத்தின் சுதந்திரத்திற்கு சகல விதமான ஆதரவுகளையும் அளித்த நாடு இந்தியா. மேகலாயா மாநிலத்திலுள்ள பிரகரி நகரினுள் ஊடுருவிய வங்கதேச துருப்புக்கள் இந்திய எல்லைக் காவல் படையினரை கொன்றனர்.

இத்தனைக்கும் வங்கதேச பிரதம மந்திரி தேசபந்து முஜீபுர் ரஹ்மானின் புதல்வி சேக் ஹசினா இந்திய சார்பு எண்ணங்கொண்ட ஜனநாயகவாதி என்பது குறிப்பிடத்தக்கது.




# சார்லி சாப்ளினின் உரையிலிருந்து



"போர் வீரர்களே! இந்த விலங்குகளிடம் உங்களைக் கொடுத்துவிடாதீர்கள். அவர்கள் உங்களை வெறுக்கிறார்கள். அடிமைப்படுத்துகிறார்கள். உங்கள் வாழ்க்கையை கடுமையாகக் கட்டுப்படுத்துகிறார்கள். நீங்கள் என்ன நினைக்க வேண்டுமென்றும் எதை உணர வேண்டும் என்றும் கூறுவார்கள். உங்களைப் பயிற்றுவிப்பார்கள். உணவு கொடுப்பார்கள். கால்நடைகளைப்போல் உங்களை நடத்தி இறுதியில் வெடிமருந்தாகப் பயன்படுத்துவார்கள். நீங்கள் உங்களை இந்த செயற்கை மனிதர்களிடம் தந்துவிடாதீர்கள். போர்வீரர்களே! அடிமையாவதற்காகப் போரிடாதீர்கள். சுதந்திரத்துக்காய் போரிடுங்கள். விஞ்ஞானமும் முன்னேற்றமும் நம் எல்லோருடைய மகிழ்ச்சிக்கும் இட்டுச் செல்லும் வகையிலான ஒரு உலகத்திற்காகப் போராடுவோம்.

போர் வீரர்களே! ஜனநாயகம் என்ற பெயரில் நாம் ஒன்றுபடுவோம்.

தி. சிறிதரன் 141A, மன்னார் ரோட், குருமன்காடு, வவுனி[illegible] C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது